

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு விடை நல்லோரை வைகாசித் திங்கள் 12ம் நாள் (26-05-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## திருஞானசம்பந்தர் குருபூசை நாள்



வைகாசித் திங்கள் 14ம் நாள் குருகு (மூலம்) நாண்மீன் அன்று (மே 28) சம்பந்தர் சுவாமிகளின் குருபூசை தென்னாட்டில் கொண்டாடப்படும்.

## தீநுண்மிப் பரவலினால் அவதியுறும் ஆதரவற்ற மக்களுக்கு உண்ண உணவளித்து பசிப்பிணியைப் போக்குவோம்



**மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார்அடியார் தமை அமுது செய்வித்தல்**

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மிகவும் வேகமாகப் பரவிவரும் தீநுண்மிப் (கொரோனா) பரவலினால் பெருமளவு மக்கள் தொற்றுக்கு உள்ளாகியும் அதனால் இறப்புகளைச் சந்தித்தும் வருகின்ற அதேவேளை, தொடரும் பயண முடக்கங்கள் மற்றும் உரடங்குகளால், அன்றாடம் தொழில் செய்பவர்கள் மற்றும் தொழிலுக்குச் செல்லமுடியாத பலர் பட்டினியின் விளிம்பில் பரிதவிக்கும் நிலமைகள் ஏற்ப்பட்டுள்ளன. இவற்றினைக் கருத்தில் கொண்டு, கோயில்கள், சமய நிறுவனங்கள், ஆதீனங்கள் மற்றும் மடாலயங்கள் மக்களுக்கு உதவ முன்வரவேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றனர்.

மற்றவர்களிடம் உண்மையான அன்பு காட்டுவதையே சிவநெறியாகக் கொண்டது எங்கள் சைவநெறி. அதன்வழி நின்று இனமத வேறுபாடுகளின்றி பசியால் வாடும், ஆதரவற்ற மக்களுக்கு உண்ண உணவோ, அல்லது உணவுப் பொருட்களோ வழங்கி இந்தப் பேரிடர்க் காலத்தினை கடக்க சைவர்களாகிய அனைவரும் முன்வர வேண்டும்.

அத்துடன் இந்த பெருந்துயர் விரைவில் விலகிடவும் மற்றும் இதனால் இறந்த மற்றும் இறுதிக்கிரிகைகள் கூட செய்யமுடியாமல் மறைந்த அனைத்து உயிர்களினதும் சாந்தி வேண்டியும் அனைவரும் எல்லாம் வல்ல ஆடல்வல்லானின் அடிபோற்றுவோம். அத்துடன் யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில், கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் மறைமதி (6-10-2021) பேரோடுக்க நாளிலே தீநுண்மிப் பரவலினால் உயிர்நீத்த அனைவருக்காக தென்புலத்தார் வழிபாடுகள் இடம்பெறும். அவர்களின் உயிர் பரம்பொருளின் பாதங்களில் ஆறுதல் பெற எல்லாம்வல்ல கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதரிடம் விண்ணப்பம் வைத்து வேண்டிநிற்போம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

## ஆயிரம் ஆயிரம் சைவத்தமிழ் விதைகளை விதைத்த

## ஞானவிவசாயி அருட்குருநாதர் ஒளியரசு ஐயா



தெய்வத்தமிழ் வழி, இறை புகழ்பாடியும் பரவியும், வாழ்த்தியும், வணங்கியும், போற்றியும், ஆற்றியும், இயற்றியும், உருகியும், ஒடுங்கியும், உள்நின்று உணர்ந்து வழிபடும், தமிழர் வாழ்வியல் வழிவந்த வழிபாட்டு முறைகளைப் புதுப்பித்து, மந்திரத் தமிழினை சைவத் தமிழரிடையே மீண்டும் புத்துயிர் பெறவைக்கும் அரும்பணியை ஆற்றிவருகிறார் நந்திவரம் இராமசாமி நடராஜன் ஒளியரசு அவர்கள்.

மறைமலை அடிகளார் வழிவந்த அருட்குருநாதர் ஒளியரசு ஐயா அவர்கள் 10,000 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தெய்வத்தமிழில் தீக்கை கொடுத்து, தமிழ்நாடு எங்கும் சைவத்தினையும், தமிழையும் தழைத்தோங்க அடித்தளம் இட்டு வருகின்றார். அத்துடன் ஆதிப் பண்பாட்டின் அழகிய தமிழ்முறை வாழ்வியல் சடங்குகளை, முன்னர் போலவே தமிழிலே செய்யும் நெறிமுறைகளை அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்துவதுடன், கடைப்பிடித்தும் வருகிறார். இதுவரை அண்ணளவாக 1600 மனையறம் ஏற்கும் மங்கல நாண் அணிவித்தல்களையும், பல புதுமனைப்புகு விழாக்களையும் மற்றும் தமிழர் வாழ்வியல் சடங்குகளை செந்தமிழில் செய்துள்ளார்.

**நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்**
**தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்**
**தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்**
**ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே**

**- திருவாசகம்**

என்று வாதவூரராகிய மாணிக்கவாசகர், சிவபெருமானிடம் இருந்து தமிழிலே "சிவாயநம" எனப்பெற்றது போல், நீங்களும் குருநாதரிடம் தமிழ்மொழியில் தீக்கை பெறவேண்டுமாயின் ஐயாவினை அல்லது அவர் வழி வந்தவர்களிடத்தில் சிவதீக்கை பெற்று, சைவத் தமிழராய் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, வீடுபேறு அடைய எல்லாம்வல்ல தில்லைக்கூத்தன் அருள் புரிவராக.

**விரிவான கட்டுரையை உள்ளே பார்க்கலாம். (பக்கம் 07)**

## ஆறுதிருமுருகன் அவர்களுக்கு அகவை அறுபது




சிவபூமியின் சைவ அடையாளத்திற்கு அணிகலனாக விளங்கும் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆ.ஆறுதிருமுருகன் ஐயாவிற்கு வைகாசித் திங்களில் அகவை அறுபது. சமயப்பணிகளுடன் நிற்காது, சமூக மற்றும் பண்பாட்டுப் பணிகளை சிறப்புறச் செய்துவரும் திருமுருகன் ஐயா, வையத்துள் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல சிவபரம்பொருளை வேண்டுகிறோம்.


**திருச்சிற்றம்பலம்**

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**


**ஐயாவின் அறப்பணிகள் பற்றிய விரிவான கட்டுரையை உள்ளே பார்க்கலாம். (பக்கம் 11)**

## சைவமும் தமிழும் தழைக்கத் தரணியில் வந்த தவக்குழந்தை - திருஞானசம்பந்தர் சுவாமிகள்









# உலகுய்ய அழுத தவமுதல்வர் சம்பந்தர்



ஆலவாய் அமுதன்

சைவம் நலிவுற்ற காலத்தில், இறைவனால் அனுப்பப்பட்ட தவமுதல்வர் சம்பந்தர் தரணியிலே மீண்டும் சைவத்தினையும், தமிழினையும் வேரூன்றச் செய்தது மட்டுமல்ல, தமிழின் பெருமையையும், மந்திரத் தன்மையினையும் ஆணையாக அடித்துக்கூறி வெளிப்படுத்தியுள்ளார்.

**“தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்**
**காடுடைய சுடலைப் பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த அருள்செய்த**
**பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவனன்றே.”**

அவனியில் தோன்றும் அனைத்துக் குழந்தைகளும் பல காரணங்களுக்காக அழும். பாலிற்காகவோ, பயத்தாலோ என பல விடயங்களை வெளிப்படுத்தவும், தம் தேவையைப் பூர்த்தி செய்யவுமே அழும். ஆனால் அதற்கு ஒரு குழந்தை மட்டும் விதிவிலக்காய் உலகத்தின் உய்வுக்காக அழுதது. சேக்கிழார் சுவாமிகள்,

**“எண்ணில் மறை ஒலி பெருக எவ் உயிரும் குதுகலிப்ப**
**புண்ணியக் கன்று அனையவர் தாம் பொருமி அழுது அருளினார்”**

அக்குழந்தை அழுததால் உலகமே மகிழ்ந்ததாய் பாடியுள்ளார். இவ்விதம் பாடியமைக்கு காரணம் உண்மையான தவத்தை பின்நாளில் அக்குழந்தை ஆற்றியமையேயாகும். அத்தவக் குழந்தை வேறுயாருமிலர். உலகம் உய்யும்படியாக முதல் மூன்று திருமுறைகளை அருளி, தான் பெற்ற இன்பத்தை உலகம் பெறச் செய்த திருஞானசம்பந்தரேயாவார். இதையன்றோ “தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்” எனும் அடி உணர்த்துகின்றது.

சிவபாதவிருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் ஆளுடையபிள்ளையாக உதித்த இச்சுடர் பிறந்த இடமும் பிறந்த காரணமும் அளப்பரியவை என்பதை பெரியபுராணம்,

**“தவம் பெருக்கும் சண்பையிலே தாவில் சராசரங்கள் எலாம்**
**சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்”**

எனப் போற்றுகின்றது. முக்கண்ணியிடம் திருமுலைப்பாலுண்டு, முத்தாக மூன்று திருமுறைகளும்பாடி, சைவம் பரந்திடவே முனைப்புடன் செயலாற்றியவர் ஞானசம்பந்தர். காழிமன்னன், புகலியர்கோன், தோணிபுரத்தென்றல், பாலறாவாயர், ஆளுடையபிள்ளை, முத்தமிழ்வித்தகர் என பல நாமம் பெற்றதுடன் மட்டுமன்றி, ஈசனிடம் முத்துச்சின்னங்கள், பொற்றாளம்பெற்றதுடன், தந்தையின் யாகத்திற்காக பொன்னார் மேனியனிடத்துப் பொற்கிளியும் பெற்றவர்.

திருஞானசம்பந்தரை ஈன்ற பகவதி அம்மையார் அவதரித்த பாலைநிலமான திருநனிப்பள்ளியை நெய்தல் நிலமாக மாற்ற இறைவனை வேண்டி

**“காரைகள் கூகைமுல்லை களவாகை யீகை படர்தொடரி கள்ளி கவினிச்**
**சூரைகள் பம்மிவிம்மு சுடுகா டமர்ந்த சிவன்மேய சோலை நகர்தான்**
**தேரைக ளாரைசாய மிதிகொள்ள வாளை குதிகொள்ள வள்ளை துவள**
**நாரைக ளாரல்வாரி வயன்மேதி வைகும் நனிபள்ளி போலும் நமர்காள்.”**

எனும் பதிகத்தை பாடினார். இவ்விதம் ஆளுடையபிள்ளை செய்த அற்புதங்கள் அளப்பரியவை. திருவோத்தூரில் வாழ்ந்த சிவபத்தரின் ஆண்பனைகளை “பூத்தேர்ந்தாயன” எனும் பதிகத்தைப்பாடி ஆண்பனைகளை குரும்பைகளுடன் கூடிய பெண்பனைகளாக மாற்றுவித்தார். பாம்பு தீண்டி திருமருகலில் உயிர் நீத்த வணிகனை உயிர்பெறச் செய்ய உமைபங்கனிடம் வேண்டி

**“சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்**
**விடையா யெனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.”**

எனும் பதிகம் பாடியருளினார்.

ஆலவாய்பெருநகரில் சமணம் பரவி சைவம் குன்றிப்போனது, மங்கையற்கரசியார், குலச்சிறையாரின் வேண்டுதலால் பாண்டிநாடு சென்றதோடு சமணர் தாம் தங்கியிருந்த மடத்தில் தீ வைத்ததால் அத்தீயைப் பாண்டிய மன்னனுக்கே வெப்பு நோயாக மாற்றுவதற்காக “அமணர் கொளுவும் சுடர்பையவே சென்று பாண்டியற்காகவே” எனும் பதிகம்பாடி நோயை மன்னனுக்கு அளித்து, புத்தி



புகட்டி பின் நோயை அகற்ற திருநீற்றுப்பதிகம் பாடி தீர்த்தருளியதுடன் அனல்வாதம், புனல்வாதம் போன்றவற்றில் வென்று, சைவத்தைப் பாண்டிய நாட்டில் தழைக்கச் செய்தார். அவ்விதம் அனல்வாதத்திலே சமணர்கள் தத்தமது உண்மைகளை எழுதிய ஏட்டையும், சம்மந்தர் “தளிரிளவளரொளி” எனும் பதிகம்பாடி

**“போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்**
**பாகமார்த்த பைங்கண்வெள்ளேற் றண்ணல் பரமேட்டி**
**ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்**
**நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே”**

எனும் பதிகம் எழுதப்பட்டுள்ள ஏட்டையும் இட்டார். சமணர்கள் இட்ட ஏடு கருகிப்போய்விட சம்பந்தர் இட்ட ஏடு வெம்மையிலும் பசுமையாய் இருந்தது. கொடிமாடசெங்குன்றுருக்கு சம்பந்தர் அடியவர்களுடன் சென்றிருந்த வேளையில் அங்கு பனிகாலம் நிலவியமையினால் அடியவர்கள் பலர் குளிர்சுர நோயினால் துன்பமுற்றனர். இதையறிந்து இறைவனிடம் அடியவர்களிற்கு மட்டுமன்றி அவ் ஊரிலிருப்பவர்கள் எவருக்கும் அந்நோய் வராதிருக்கும்படியாக

**“அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்**
**உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே**
**கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறாதிரு நீலகண்டம்.”**

எனும் திருப்பதிகத்தை பாடியருளினார்.

மயிலாக உமையவள் மகேசனை பூசித்த மயிலாப்பூரில் பாம்பு தீண்டி உயிர்நீத்த மங்கையாம் பூம்பாவையின் சாம்பலை மீண்டும் பாவையாய் உயிர்த்தெழச் செய்யும் பொருட்டு

**“மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு**
**அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்”**

எனும் பதிகம்பாடி பூம்பாவையை இறையருளால் உயிர்ப்பித்தார். சம்பந்தர், அப்பர் சுவாமிகளுடன் இணைந்து கொடும்பஞ்சத்தால் வருந்திய திருவீழிமிழலையில் அடியவர்க்கு அன்னமிட படிக்காசு பெற்று அன்னதானமளித்ததோடு,திருமறைக் காட்டிலுள்ள முதன்மை வாசற்கதவு வேதங்களால் மூடப்பட்டு இருந்தமையால் அப்பர் சுவாமிகள் அக்கதவைத் திறக்கவும், சம்பந்தமூர்த்தி அதைப் பூட்டவும் பாடி அற்புதம் செய்தனர் .

இத்தகு அற்புதங்களாற்றி சிவநெறியையும், சைவத்தையும் தழைத்தோங்கச் செய்து, சிறப்புற சித்திரக் கவிபாடி, சிவனை மகிழ்வித்த சம்பந்தமூர்த்திக்கு நம்பியாண்டார்நம்பியின் புதல்வியான தோத்திரப்பூரணையுடன் திருமணத்தை நிச்சயித்து, பெரியோர்கள் திருமணஞ்செய்வித்தனர் . தோணிபுரக்கோயிலில் இறைவன் முன்னிலையில் தம்மனையாளைக் கைப்பிடித்த அடிகள் அவனியில் வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து தம்மை விடுவிக்கும்படி இறைவனிடம் “நல்லூர்ப் பெருமணம்” எனும் பதிகம் பாட இறைவன் சோதியை தோற்றுவித்து, அச்சோதியில் திருமணத்திற்கு வந்த அனைவரும் கலக்கும்படி ஈசன் ஆணையிட்டதால் அனைவரும் அச்சோதியின் நடுவிலுள்ள சிறுவாயில் வழியாய் சோதியுட்புகுந்தனர். சம்மந்தர் தன் மனைவியின் கைத்தலம் பற்றி

**“காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தம்மை நன்னெறிப் புய்ப்பது**
**வேதம் நான்கிலும் மெய்ப் பொருளாவது**
**நாதன் நாமம் நமச்சிவாயவே”**

எனும் பதிகம் பாடி சோதியுட் போய் சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

மூன்று வயதிலிருந்து பதினாறு வயதுவரை நலிவுற்ற மெய்ச் சமயமான சைவத்தை வேரூன்றச் செய்ய பதிகங்களைப்பாடி அதிசயங்களாற்றிய திருஞானசம்பந்தர் என்றும் போற்றப்பட வேண்டிய சிவக்கொழுந்தாவார்.

**“பயனாகும் நல்லான் பனைக்கு விடத்திற்கு**
**மயிலாகும் நோய்க்கு மருந்தாகும்- உயிராகும்**
**சிந்தும் எலும்பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்**
**பந்தன் இயம்புதிருப் பாட்டு”**

திருச்சிற்றம்பலம்

## ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

# உலகின் முதற் சிவன்கோயில் உத்தரகோசமங்கை

## (மாணிக்கவாசகருக்கு உருவக் காட்சிகொடுத்த சிறப்புத்தலம்)

**அமைவிடம் : இராமநாதபுரம், தமிழ்நாடு**

உத்தரகோச மங்கை எனும் பெருந்தலம் சைவத்தமிழ்ப் பண்பாட்டில் பழமையான தலம் என்று சொல்லலாம். உலகின் முதல் சிவன் கோயில் என்றும் இது புகழப்படுகின்றது. இந்தக்கோயில் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டிலே அமையப்பெற்றுள்ளது. இந்தத் தலத்தின் பழமையை உணர்த்தும் வண்ணம் மண் தோன்றிய போதே மங்கை தோன்றியது எனும் வழக்காறு நிலவி வருகின்றது. சங்க இலக்கியத்தில் இவ்வாலயம் இலவந்திகைப் பள்ளி என்று அழைக்கப்பட்டதாக தமிழியல் அறிஞர்கள் சொல்கின்றனர். இவ்வாலய வரலாற்றிலும் ஆலயத்தில் உள்ள மதில் கல்வெட்டுகளிலும் இராவணனின் மனைவி மண்டோதரியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது இவ்வாலயத்தின் பழமையை மேலும் பறைசாற்றி நிற்கின்றது. மேற்குறித்த கல்வெட்டில் "இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்" என்ற வரி பொறிக்கப்பட்டுள்ளது.

**இறைவன் - மங்களேசுவரர், மங்களநாதர், காட்சி கொடுத்தநாயகர், பிரளயாகேசுவரர்**
**இறைவி - மங்களேசுவரி, மங்களாம்பிகை, மங்களநாயகி**
**கோயில் மரம் - இலந்தை (3000 வருடம் பழமையான மரம்)**
**தீர்த்தம்- அக்கினி தீர்த்தம்**
**வழிபட்டோர் - மாணிக்கவாசகர், வேதவியாசர், மிருகண்டு முனிவர், வாணாசுரன் , காகபூசண்டர்**

**தலத்தின் மீது பாடப்பட்ட பாமாலைகள்**
**வாதவூராரின் நீத்தல் விண்ணப்பம்**

**"கடையவனேனைக் கருணையினால்**
**கலந்து ஆண்டு கொண்ட**
**விடையவனே விட்டிடுதி கண்டாய்**
**விறல் வேங்கையின்தோல்**
**உடையவனே மன்னும் உத்தர**
**கோச மங்கைக்கு அரசே**
**சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்**
**என்னைத் தாங்கிக் கொள்ளே."**

எனும் நீத்தல் விண்ணப்பப் பாடல் இத்தலத்தின் பெருமை, அருமை, பழமை பறை சாற்றி நிற்கிறது.

முருகனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட அருணகிரிநாதரும் இத்தலத்தில் அருளும் முருகப் பெருமான் மீது முத்தான செந்தமிழில் திருப்புகழ் பாடி நெகிழ்ந்துள்ளார்.

**"உட்பொருள் ஞானக் குறமகளும்**
**பற் சித்திரை நீடப் பரிமயில்**
**முன்பெற்றுத்தர கோசத் தலமுறை கந்தப்**
**பெருமானே!"**

### கோயில் சிறப்பும் மகிமையும்

உத்தரம் என்றால் அறிவுரை. கோசம் என்பதன் பொருள் இரகசியம். மங்கை என்பது சக்தியை குறித்து நிற்கின்றது. இறைவன் இறைவிக்கு இரகசியமாக வேத ஆகமங்களை கூறியதால் இக்கோயில் உத்தர கோச மங்கை என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். இத்தலம் மாணிக்கவாசகரால்



வழிபடப்பட்ட தலம். இங்கு திருவாசக ஏடு இல்லாத மாணிக்கவாசகராக அடிகளார் காட்சி தருகின்றார். இது அவரின் முற்பிறப்பு என்றும் கருதப்படுகின்றது. இங்கு மாணிக்கவாசகருக்கு இறைவன் காட்சி கொடுத்துள்ளார். " உத்தர கோச மங்கையுள் இருந்து வித்தாக வேடம் காட்டிய இயல்பும்" என்று அவரே கீர்த்தித்திரு அகவலில் சான்று பகிர்கின்றார். நீத்தல் விண்ணப்பம் உள்ளடங்கலாக 38 இடங்களில் இக்கோவிலைப் பற்றி வாதவூரர் சொல்லிச் செல்கின்றார்.

மங்கை எனும் பெயர் உடைய இத்தலம் சக்திக்கு முக்கியத்துவம் வழங்கும் தலமாகக் காணப்படுகின்றது. இத்தலத்து இறைவனை சக்தி வழிபடுவதாக நம்பிக்கை நிலவுகின்றது. பரதவர் மகளாக பிறந்த அம்பாளை கொக்கலிங்கப் பெருமான் திருமணம் புரிந்து இத்தலத்தில் வைத்து வேத அறிவுரை வழங்கி பின் மதுரையை அடைந்ததாக மதுரைப்புராணம் சொல்கின்றது.

மற்றொரு மங்கையாகிய இராவணனின் மனைவி மண்டோதரியின் வழிபாட்டில் மகிழ்ந்த இறைவன் அங்கிருந்த ஆயிரம் முனிவர்களைப்பார்த்து மண்டோதரியின் வழிபாட்டில் மகிழ்ந்து அவளுக்கு அருள் புரிய இலங்கை மூதூர் செல்கின்றோம். அதுவரை இங்கேயே இருந்து வேதாகம சுவடிகளை காத்து வாருங்கள். எப்பொழுது எம் திருமேனி இலங்கை அரசன் இராவணனால் தொடப்படுகின்றதோ அப்பொழுது இந்தக்குளத்தில் தீப்பிழம்பு உருவாகும் என்று வானொலியாக கூறி மறைந்தார். இலங்கை அரசி மண்டோதரியின் கைகளில் பச்சிளம் குழந்தையாக ஈசன் தவழ்ந்தார். அதைப்பார்த்த இராவணன் தந்தையின் இடத்தில் இருந்து அந்தக்குழந்தையை அணைத்து மகிழ்ந்தார். இராவணனின் திருக்கரம் பட்டதும் உத்தர கோச மங்கைக்குளத்தில் தீப்பிழம்பு தோன்றியது. உடனே தம்மை அறியாமல் அங்கிருந்த முனிவர்கள் அதற்குள் வீழ்ந்து மறைந்தார்கள். ஆயிரத்தில் ஒருவர் மட்டும் சுய நினைவுக்கு மீண்டு அதிலிருந்து தப்பித்தார். பின்னர் அந்த உயிர் நீத்த 999 பேருக்கும் தப்பித்த ஒருவருக்கும் சேர்த்து உமை அம்மையுடன் விடை மீது அமர்ந்து காட்சி வழங்கினார் இறைவன். இதனால் காட்சி கொடுத்த நாயகன் என்று இத்தல இறைவன் அழைக்கப்படுகின்றான். இவ்வாறு காட்சி பெற்ற ஆயிரம் பேரும் இலிங்க வடிவாக இறைவனுடன் இணைந்தனர். இன்றும் இத்தல அக்கினி தீர்த்த இலத்தை மரத்தடியில் இருக்கும் சிறிய கோயிலில் உள்ள இலிங்கத்திருஉருவில் ஆயிரம் இலிங்கங்கள் காணப்படுகின்றன.

இலங்கையைச் சேர்ந்த கண்டி அரசராலும் மேலும் பலராலும் இவ்வாலய திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது வரை பழமை மாறாது இக்கோயில் காட்சி அளிக்கின்றது. கட்டட அமைப்பில் உச்சம் தொடும் இத்தலம் தட்சிண கயிலாயம், இலந்தைவனம்(பத்ரிகாரண்யம்) வியாக்ரபுரம், ஆதி சிதம்பரம், பிரமபுரம், நால்வேதபுரி (சதுர்வேதபுரி), மங்களபுரி போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. ஆலயச் சுவரில் திருவாசகப் பதிகங்களான பொன்னூசல், நீத்தல் விண்ணப்பம் முதலியவை கல்லில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளன. சிவனின் பூசைக்கே பயன்படுத்தப்படாத தாழம்பூ இத்தலத்தில் மட்டும் பயன்படுத்தப்படுகின்றது.

இறைவன் தீப்பிழம்பாக தோன்றிய குளம் அக்கினி தீர்த்தம் என அழைக்கப்படுகின்றது. இது தவிர பிரம்ம தீர்த்தம், மொய்யார் தடப்பொய்கை, வியாச தீர்த்தம், சீதள தீர்த்தம், மங்கள தீர்த்தம் என்பனவும் உள்ளன. இங்குள்ள ஆடல் வல்லான், ஆதி சிதம்பரேசர் என்று அழைக்கப்படுகின்றார். இங்குள்ள ஆடல் சபை, இரத்தின சபை என்று அழைக்கப்படுகின்றது. இங்கு விலை மதிக்க முடியாத ஆறு அடி உயர மரகத ஆடல் வல்லான் காட்சி அளிக்கின்றான்.

**"உமை காண இங்குள்ள அறை போன்ற அமைப்பில் ஆடிய சிவன் பிறகு யாவரும் காண அம்பலத்தில் ஆடினான்"**

என்று சொல்வார்கள். இதை நினைவில் கொண்டு தான் அறையில் ஆடித்தான் அம்பலம் ஏற வேண்டும் எனும் பழமொழி நிலவி வருகின்றது. மிகச்சிறிய அணுவில் இறைவன் ஆடும் ஆட்டத்தை இத்தலமும் மிகப்பெரிய அண்டத்தில் ஈசன் ஆடும் ஆட்டத்தை தில்லையம்பலமும் குறிப்பதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இவ்வாலயத்தில் உள்ள 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இலந்தை மரமே இவ்வாலயத் தலமரமாக காணப்படுகின்றது. இங்கு கருங்கல்லால் செதுக்கப்பட்ட குருந்த மரமும் அதன் கீழ் உறையும் தென்முகக் கடவுளும் அவரிடம் அறிவுரை கேட்கும் மாணிக்க வாசகர் சிலையும் காண்போரை இறைவன் பால் இழுத்துச்செல்லும். உத்தரகோச மங்கைக்கு அரசே போற்றி.

உத்தரகோசமங்கை மண்ணை மிதித்தால் முத்தி. வாழ்நாளில் சைவர்கள் பார்க்கவேண்டிய அற்புதத்தலம் திருஉத்தரகோசமங்கை.

**திருச்சிற்றம்பலம்**



அருள்மிகு மரகத ஆடல்வல்லான்



அருள்மிகு மங்களநாதப் பெருமான்



அருள்மிகு மங்களநாயகி அம்மை







சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org


# இறந்தார்க்கும் இல்வாழ்வான் துணை!

உலக மாந்தர்கள் தம் வழமையான வாழ்க்கையை வாழ முடியாமல் திணறுகின்றனர்! ஏதோ ஒரு இரும்புக்கரம் ஒவ்வொருவரையும் இறுகப்பற்றி இழுப்பதைப்போல் இருக்கிறது, அந்தக் கொரோனா நுண்மியின் பெரும் தொற்று! அன்றாட வாழ்வையும் வருவாயையும் இழந்து தவிக்கும் ஏழைகளையும், கல்வியையும் இழந்து நிற்கும், ஏராளம் பிள்ளைகளும் எதிர்காலம் மீதான பெரும் அச்சத்தையே ஏற்படுத்துகின்றனர்!

கண்முன்னே துடிதுடித்து இறந்து போகும் உறவுகளைக் காத்திடத் துடிக்கும் சொந்தங்களின் கதறலும், விரக்தியும், காணொளிகளில் காணும் போதே இதயத்தை நெரிக்கிறது! இந்தியப் பெரும்தேசத்திலும், எங்கள் நாட்டிலும் அதிகரிக்கும் இறப்பு வீதத்தைப் பார்த்து பயம் கொள்ளாமல் இருக்கவும் முடியவில்லை! வரிசை வரிசையாக உடலங்கள் எரியூட்டப்படுவதும், நடைபாதையோரங்கள் கூட பிணவாடைவீசும் மயானங்களாய் மாறிப்போனதையும் கண்டு கலங்குகின்றோம்.

மருத்துவத் துறையும் கைமீறிப்போகும் மரணங்களைக் கட்டுக்குள் வைக்கும் குறைந்தபட்ச கருவிகளே தட்டுப்பாடாக உள்ள நிலையில் திணறுகின்றது. இறந்தவர்களை எதுவித சமய சடங்குகளோ, பிதிர் வழிபாடுகளோ இன்றித் தீயிடும் பெருந்துயரம் நிகழ்ந்தேறுகின்றது. உரிமையோடு தோளில் சுமந்து பொற்சுண்ணம் இடித்து, வாய்க்கு அரிசி இட்டு, பந்தம் சுமந்து செய்ய வேண்டிய ஈமச்சடங்குகள், அனாதைப் பிணங்களை எரியூட்டுவதைப்போல், ஊர் கூடி அழவும் முடியாமல் ஆற்றப்படுவதை எப்படிச் சொல்வது?

சைவத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, பழங்குடிகளாய் நாகரிகமற்றுக் காடுகளில் வாழும், காட்டுவாசிகளும், ஒரு சக மனிதனின் இழப்பை சடங்குகளின் ஊடாகவே நிறைவு செய்கின்றனர். அது மறுமை குறித்த நம்பிக்கைகளுக்கு அப்பால், வாழும் மனிதர்களின் மனநிலை சார்பான ஒரு சமப்படுத்துகைக்கு உட்பட்ட நாம் இவ்விடயத்தில், ஆத்மார்த்தமான உணர்வு சார்பான விரதங்களுக்கும் நடைமுறைகளுக்கும் உட்பட்டவர்கள். இதனாலேயே தான், வள்ளுவன்,

**“துறந்தார்க்கு துவ்வாதவர்க்கும் இறந்தார்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை”**

இறந்து போனால் அவனுக்குரிய கடமைகளை செய்வது, இல்லறத்தில் ஒழுகுபவனின் கடன் என்றான். இன்று இல்லறக்கடனைக் கூட நிறைவேற்ற இயலவில்லை! உலகநெறியின் உச்சம் கண்ட வள்ளுவன், இல்லறத்தில் உள்ளவன் பதினொரு பேருக்குத் துணை செய்வது தலையாயது என்று வலியுறுத்தும் பாங்கும் மாண்பும் மகத்தானது.

இறந்து போன பின்னே, தென்புலம் சேரும் முன்னவர்களையும், போற்றும் கடனையும் வள்ளுவன் விதிக்கிறான்.

**‘தென்புலத்தார் தெய்வம் விருந்தோக்கல் தானென்றாங்கு,**
**ஐம்புலத்தாறோம்பல் தலை’**

கொரோனா பேரிடரால் இறந்து போகும் உலக மாந்தரை மருத்துவ சுகாதார விதிமுறைகளால், இறந்தவுடன் செய்யமுடியாத, கடமைகளை அவர் தென்புலம் சேர்ந்த பின்னராவது, தென்புலத்தார் வழிபாடு இயற்றுதலே இனி எம் கடனாகின்றது! அல்லலுற்று மடிந்து போன ஆன்மாக்களின் சாந்திக்காக, எம் நம்பிக்கைகளுக்காகவும் இறந்து போன முன்னவர்கள் மீண்டும் அருவ உருவில் எம்மிடம் வருகின்ற காலமாக கருதப்படும் எதிர் வரும் புரட்டாதி மாத நிறைமதி மறுநாளில் இருந்து புரட்டாதி மாத மறைமதி நாள் வரையான காலத்தில், இறந்து போன உலக மாந்தர் அனைவருக்காகவும் வழிபாடு செய்வோம். தென்னாடு செந்தமிழாகம சிவமடத்திலும், அக்காலத்தில் நடைபெறும் தென்புலத்தார் வேள்வியிலும் இணைந்து முன்னவர்களின் துணை பெறுவோமாக!

**திருச்சிற்றம்பலம்**

# யாழ் நகரத்துக்கு வெளியே சைவத்தின் விதைநிலம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## திங்கள் ஒரு பள்ளி




யாழ்ப்பாணத்திலே கொக்குவில் பகுதியிலே ஆரம்பக் கல்வியிலே தனக்கெனத் தனியிடத்தைப் பதித்து, சிறந்து வழங்கும் பாடசாலை கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. தமிழ் வளர்த்த அறிவியலாளர்களுள், கொக்குவிலின் மைந்தன் காலஞ்சென்ற செல்லையா வாத்தியார் 1910ம் வருடம் கொக்குவில் சைவ மக்களின் கல்வி மேம்பாட்டையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டும், ஆங்கில மோகத்தினால் மதம்மாறுவதையும் கருத்தில் கொண்டும், தற்போது கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அமைந்திருக்கும் பகுதியை உள்ளடக்கிய இடத்திலே கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற இயற்பெயருடன், ஒரு பாடசாலையை உருப்பெற வைத்தார். இவர் இதே பாடசாலையில் ஆசிரியராகவும் அதிபராகவும் கற்பகதருவாக கடமையாற்றி தம்மூர் மட்டுமல்ல அயலூர் பிள்ளைகளினதும் அறிவுப் பசியையும், வயிற்றுப் பசியையும் போக்கி அரும்பணி புரிந்தமை தெரிய வருகின்றது. இங்கு கற்ற ஆரம்ப மாணவர்களுள் ஒருவரான கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திரு. பழனித்துரை அவர்கள் பல்வேறு வைபவங்களிலும் ஆற்றிய உரைகள் இதற்கு ஆதாரமாகின்றன.



**சிவத்திரு.இ.செல்லையா**
**நிறுவுனர்**

அமரரான உயர் திரு. செல்லையா வாத்தியாரால் உருவாக்கப்பட்ட கொக்குவில் ஆங்கிலப் பாடசாலை எனும் கரு அவர்களினதும், உடன் சேவை செய்த ஆசிரியப் பெருந்தகைகளினதும் தளரா முயற்சியால் வளர்ந்து, உருப்பெற்று காலப் போக்கில் கொக்குவில் இந்துக் கல்லூரி என்ற பெயருடன் மாவட்டத்திலேயே முன்னனி பாடசாலைகளில் ஒன்றாக வளர்ந்தோங்கியது.

பின்னர் 1960ம் வருடம் மார்கழி மாதம் அரசாங்க முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்பட்டு அரசாங்கப் பாடசாலையாகி ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை வகுப்புக்களை உள்ளடக்கிய AB தர பாடசாலையாக தரமுயர்ந்தது. காலப்போக்கில் அரசாங்கம் கொண்டுவந்த கல்விச் சீர் திருத்தங்கள் பாடசாலைகளை மகிமைப்படுத்தும் திட்டங்களினால் ஆரம்ப பிரிவுகளை மூடிவிடத் தீர்மானித்தது. 1975ம் வருடம் இப்பாடசாலையில் முதலாம் வருடம் அனுமதி நிறுத்தப்பட்டது. இதனால் விசனமடைந்த கொக்குவில் வாழ் மக்கள், அப்போதைய நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.அருளம்பலம் அவர்களினூடாக இப்பாடசாலையின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாய் அமைந்த கோரிக்கை ஒன்றினை கல்வித் திணைக்களத்திற்கு முன்வைத்ததன் பயனாக, கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஒரு பகுதியில் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை என்ற பெயருடன் இயங்க அனுமதி கிடைத்தது. தனிப் பாடசாலையாக தரத்திற்கு ஒவ்வொரு பிரிவுடன் கூடிய கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு.மா.மகாதேவா அவர்களால் 1976.01.19 அன்று சுப நேரத்தில் ஆரம்பமாகியது. முதல் அதிபராக திரு.சே.நாகலிங்கன் அவர்களும் ஆசிரியர்களாக திரு.கி.செல்வராசா, திருமதி. ம.இரத்தினம் திருமதி.செ.வடிவேலு, திருமதி. வி.நாகரத்தினம், திருமதி.ச.பேரம்பலம் ஆகியோர் கல்வித் திணைக்களத்தால் கொக்குவில் இந்துக்கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்று வந்தார்கள்.

இவர்களினதும், அடுத்து வந்தோர்களினதும் அயரா முயற்சியின் பயனாக மாணவர் தொகை அதிகரித்து சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. 1979ம் வருடம் திரு. செ.நாகலிங்கம் ஓய்வு பெற திரு.குருசாமி அவர்கள் அளப்பரிய சேவையாற்றினார். இவரது காலத்திலும் பாடசாலை படிமுறை வளர்ச்சி பெற்றதை அவதானிக்க முடிந்தது. இவரது இடமாற்றத்தின் பின் திருமதி. ம.கணபதிப்பிள்ளை அரும்பணியாற்றினார். அடுத்து திரு.அழகரத்தினம் அவர்கள் 1985.03.15 இல் அதிபராக நியமிக்கப்பட்டு பாடசாலை சிறப்புற இயங்கி வந்தது. இவரது காலத்தில் 1989ல் வகுப்புக்களின் தொகை 15 பிரிவாக உயர்ந்தது. 1989ம் ஆண்டிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறத் தொடங்கியது. இதனடிப்படையில் 1997ல் நான்கு மாணவர்கள் முதன்மைப் புள்ளிகளைப் பெற்றதோடு இவர்களிருவரும் ஜனாதிபதியிடம் பரிசில் பெற்றனர். இதே போன்று 2000 ஆம் வருடம் ஒரு மாணவன் அகில இலங்கையில் பத்துப் பேர்களில் ஒருவராக முதன்மைப் புள்ளிகளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றுள்ளார்.

1990ல் இரண்டு மாடிக்கட்டடத் தொகுதி ஒன்று ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியில் அத்திபாரம் இடப்பட்டு 1998ல் நிறைவாகியது. காரியாலயம் ஒன்றும் கட்டி முடிக்கப்பெற்றது. 2000 ஆம் ஆண்டில் பழைய மாணவர் சங்கம் அயலில் காணி ஒன்றை கொள்வனவு செய்து வழங்கியது. இதில் புவுணு உதவியுடன் மலசல கூட வசதி செய்யப்பட்டது. 2000 ஆம் வருடம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி உதவியுடன் இருமாடிக் கட்டடத்தின் தளப்பகுதி வேலைகள் ஓரளவு பூர்த்தியாகின. 2001.03.21 இவ் அதிபரின் ஓய்வைத் தொடர்ந்து அதிபர் பதவியேற்ற திரு.சி.ஞானேஸ்வரன் தனது சேவையைத் தொடர்ந்தார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : thennavan@thennadu.org




### யாழ். நகருக்கு வெளியே...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் இடமாற்றத்தை அடுத்து இப்பாடசாலை பழைய மாணவியும் முன்னாள் ஆங்கில ஆசிரியையும் கொக்குவில் தந்த தவப்புதல்வியுமாகிய திருமதி. செ. சகாதேவன் அவர்கள் 2003.03.01 அன்று அதிபராகப் பதவியேற்றார். திருமதி. செ.சகாதேவன் அவர்களது வழிகாட்டலுடன் செயற்பட்ட ஆசிரியர் குழாத்தின் முயற்சியின் பயனாக இப்பாடசாலை மாணவர்களது வெற்றிக் கொடிகள் தமிழ்த்தினப் போட்டிகளில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளிலும் ஆங்கில தினப் போட்டிகளில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிலும், அழகியல், சிறுவர் அரங்கம், பண்ணிசை, திருக்குறள் மனனம், சிறுவர் தினம், முதியோர் தினம், மகளிர் தினம், அன்பு வாரம், விரைவு கணிதம், சித்திரம் முதலான போட்டிகளில் வெற்றிகளைப் பெறத் தொடங்கின.

இந்து கலாசார அமைச்சின் உதவியுடன் பான்ட் இசை வாத்தியங்கள் பெறப்பட்டு பான்ட் இசைக்குழுவின் அறிமுகம் ஆரம்பமாயிற்று. இதற்கு மேலும் மெருகேற்றும் வகையில் புதிய காணியில் பூர்த்தி செய்யப்படாதிருந்த மாடிக்கட்டட வேலைகளைப் பொறுப்பேற்று நிறைவு செய்து தந்த பெருமைக்குரியவர்கள் கொக்குவிலின் மைந்தனும் சிறப்புக் கொடை வள்ளலுமான திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் தம்பதிகள் ஆவார்கள். திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களது பேருவகையுடன் கூடிய பங்களிப்பினாலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெருந்தன்மையான பங்களிப்பினாலும் இம்மாடிக் கட்டடத் தொகுதியில் மாணவர் ஒன்றுகூடும் மண்டபம், மேடை, கணனி அலகு, வகுப்பறைகள் என்பன சிறப்புடன் உருப்பெற்றன. புதிய சமையலறை, அதிபர் அலுவலகம் என்பனவும் உருவாக்கப்பட்டன. அவரது ஓய்வினைத் தொடர்ந்து 2013 இல் பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார்.

அவரது காலத்தில் பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளும் மேலும் சிறப்புப் பெற்றது. 2015இல் சிறுவர் நாடகப் போட்டியில் எமது பாடசாலை மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர். தமிழ்த்தினப் போட்டிகள், செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகளில் மாணவர்கள் தேசிய ரீதியில் தடம் பதித்தனர். அனைத்திற்கும் மகுடம் வைத்தாற் போல் 08.06.2016 இல் எமது பாடசாலை பழைய மாணவனின் பங்களிப்பில் கலைமகளின் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு பாடசாலையெங்கும் அருட்கடாட்சம் நிறையப் பெற்றது. அத்துடன் சுத்தமான குடிநீர் வழங்கலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2017இல் முன்னாள் அதிபர்களினது வைப்பு, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளினதும் பங்களிப்புடன் கற்றலுக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் ஏற்றதான காணி கொள்வனவு செய்யப்பட்டது. சர்வதேச ரீதியில் நடைபெறும் யூசிமாஸ் போட்டியில் எமது மாணவி ரசியாவிற்குச் சென்று கலந்து கொண்டு வெற்றியைப் பெற்றார். அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் ஆக்கத்திறன் வெளிப்பாட்டில் எமது மாணவி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் பாடசாலைக்கு விசேட விருது கிடைத்தமை பெருமைக்குரிய விடயமாகும். மேலும் தேசிய மட்டத்தில் சிறந்த தலைமைத்துவத்திற்கான குருபிரதீபா பிரபா விருதை அதிபரும் மாகாண மட்டத்தில் ஆசிரியர்களுக்கான குருபிரதீபா பிரபா விருதை இரு ஆசிரியர்களும் பெற்றுக் கொண்டனர்.

மேலும் கலாசாரப் பாரம்பரியங்களை வெளிப்படுத்தக் கூடியதான அலங்கார நுழைவாயில் வளைவு 25.05.2018 இல் பழைய மாணவியும் சட்டத்தரணியுமான செல்வி ஞானலோஜினி சிவஞானம் அவர்களால் அமைத்துத் தரப்பட்டது.

2019 இல் ஆங்கில தினப் போட்டியில் ஆங்கில கவிதைப் போட்டியில் மாணவி ஒருவர் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றார். அத்துடன் சித்திரப் போட்டி, சதுரங்கப் போட்டி என்பவற்றிலும் மாணவர்கள் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டனர். மாகாண மட்டத்தில் குருபிரதீபா பிரபா விருதை ஆசிரியர் ஒருவர் பெற்றுக் கொண்டார். அத்துடன் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி அனுசரணையில் வகுப்பறைக் கட்டடத்திற்கான அத்திவாரம் அமைச்சின் செயலாளர் திரு.வே.சிவஞானசோதி அவர்களால் இடப்பட்டு வகுப்பறைக்கட்டடத்தின் கீழ்த்தளப் பணிகள் சிறப்புற முன்னெடுக்கப்பட்டது.

2021 இல் அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து 25.03.2021 இல் திருமதி. கவின்ஜா நவஜீவா அவர்கள் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். பூர்த்தி செய்யப்பட்ட புதிய கட்டடத்தைப் பயன்படுத்துவதற்கான சமயக் கிரியைகள் நிறைவு செய்யப்பட்டு கட்டடம் மாணவர் பயன்பாட்டிற்காக புதுப்பொலிவு பெற்றது. அத்துடன் தற்போது மாணவர்களுக்கான சுகாதார வசதிகளுடன் கூடிய கழிப்பறைத் தொகுதி ஒன்று அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. கொரோனா அனர்த்தமானது உலகையே அச்சுறுத்தி நிற்கும் இக்காலப் பகுதியில் மாணவர்களின் கற்றலுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இணைய வழியில் அதிபரின் வழிகாட்டலில் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பான பணியினை ஆற்றி வருவது போற்றுதற்குரியது.

இனிவரும் காலங்களிலும் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது பாடசாலை தனக்கெனத் தனியிடத்தை பதித்து நிற்பதற்கும், சைவத்தையும் தமிழையும் வளர்த்து தொடர்ந்தும் சைவப்பாரம்பரியம் மிக்க கற்றவர்களை உருவாக்கும் தனிப்பெரும் பாடசாலையாக மிளிர கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளினதும் கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதரினதும் திருவடிகளை என்றும் வணங்கிடுவோம்.

# தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



சிவத்திரு யாழவன் சிவவேதன்

**"மின்னானை மின்னிடைச்சே ருருமினானை**
**வெண்முகிலாய் எழுந்துமழை பொழிவான் தன்னைத்**
**தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்**
**தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி**
**என்னானை யெந்தை பெருமான் தன்னை**
**இருநிலமும் அண்டமுமாய்ச் செக்கர் வானே**
**அன்னானை ஆவடுதண் டுறையுள் மேய**
**அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே."**

உலகில் பல்வேறு மதங்கள், பல்வேறு இனக்குழுக்கள், பல்வேறு கடவுள்கள், பல்வேறு கலாசாரப் பிரிவுகள் நிலவி வந்தாலும் அவற்றில் இருந்து சைவம் பெரிதும் வேறுபடுவது அன்பு எனும் ஒன்றிலேயே. சில கலாசாரங்கள் கடவுளை பயத்தோடு நோக்கின. சில கலாசாரங்கள் கடவுளை வழிபாட்டோடு மட்டும் நோக்கின. ஆனால் அவற்றை எல்லாம் தாண்டி கடவுளை அன்போடு நோக்கிய நெறியே சைவ நெறி.

அன்பின் ஆற்றல் மிகு உருவம் தாய். அந்த தாய்மையில் வைத்து இறைவனை குறிப்பிட்டுப் போகின்றது சைவம். அத்தகு காப்பவர், உயிருக்கு எல்லாம் தந்தையாக விளங்குபவர் என்று சொல்லி அந்த வரிகளில் தாய்மை உணர்வை பரவ விடுகின்றார். தாய் என்றதும் பலருக்கு நினைவு வருவது தாய் மொழி, தாய் நாடு, தாய் மண் என்பன தான். அதிலும் தாயாகிய இறைவனை தாய் மொழியில் வழிபடுவதைப் போன்ற வேறு ஒரு ஆனந்தமும் இல்லை.

ஏன் தாய் மொழியில் தாயை அழைக்க வேண்டும் என்று ஒரு கேள்வி வினாவின் அதற்கு பதில் மிக மிக எளிது. நாம் வழிபடுவதை இறைவன் அறிய வேண்டுமெனின் அது இலகு ஆனால் நாம் அறியாத எமக்கு தாய்மொழி அல்லாத ஒரு மொழியை பேசும்போது அது எமக்கு புரியுமா என்றால் இல்லை. ஆகவே அவர் அவர் தாய்மொழியில் வழிபாடு இயற்றும் போது இறைவன் மட்டுமல்ல எம் மனமும் புரிந்து கொள்ளும். இது போலத்தான் தாய் சேய் உறவும். ஒரு நல்ல தாய்க்கு குழந்தையை உணர மொழி தேவை இல்லை. குழந்தை எந்த மொழியில் பேசினாலும் உணர்வை வைத்து தாய் புரிந்து கொள்வாள் ஆனால் அந்த குழந்தையின் மனத்தாலும் குழந்தையை சுற்றி இருப்பவர்களாலும் வேற்று மொழியை உணர்வு பூர்வமாக அறிய முடியாது. அது தான் தாய்மொழி வழிபாட்டின் அடிப்படை. அது தாய் தாயுடனான தொடர்பாடலின் அடிப்படையும். தாயான ஈசற்கே உடலும், உணர்வும், உயிரும்.



சைவத்தின் பெருமையை உழவாரம் கொண்டு ஊரெங்கும் பரப்பிய பெருமை நாவுக்கு அரசரையே சாரும். அவரின் பத்தி முதிர்ச்சியே மேலுள்ள பாடல். அதன் பொருளை விளங்கி உணர்கின்ற போது பத்தி பெருக்கெடுக்கும். மேற்பாடலில் அவர் இவ்வாறு இயம்புகின்றார். மின்னல் ஏற்படுகின்றது. அந்த மின்னலை பார்த்த கணம் சிவனை வியந்து சிவனே அந்த மின்னல் என்று சொல்லி விடுகின்றார். பின்பு இடி ஓசை கேட்கிறது. உடனே அதிலும் தன்னை பறிகொடுத்த நாயனார் இடியும் அவனே என்கிறார். அப்பொழுது வானில் முகில்கள் சூழ்கின்றன. உடனே அந்த இடி, மின்னலை உருவாக்கும் மழை முகிலையே ஈசன் என்று சொல்லி உள்ளம் பூரிக்கின்றார். இவ்வாறு அவரின் உருவத்தை சொல்ல நினைத்தவர் உருவை இடி, மின்னல், முகில் என்று சொல்லி விட்டு அவருடைய இயல்பை யோசிக்கின்றார் நாயனார். யோசித்தவர் உடனே தமிழ் கொண்டு பாவிசைத்தார். ஈசன் அருளைப் பொழிபவர். அனைத்தும் அவரே. தனக்கு உவமை, நிகர் இல்லாதவன் என்று அவரது இயல்பையும் வரையறுத்த அப்பர், சற்று யோசித்து அவனின் குணத்தையும் தேட விளைந்தார். இவ்வாறான குணத்தினை சொல்ல முயன்ற அப்பர் பின்வருமாறு சொல்கிறார். ஈசன் தாயாகி

இதையே சிறப்பூட்டி அடுத்த இரு வரிகளிலும் தெளித்துப் போகின்றார் உழவாரப் படையாளி. விண் வெளியும் மண் உலகும் ஈசனே என்று சொல்லி விட்டு தொடர்ந்து அத்தகு தாயாகிய ஈசனின் அடியினை நாய் போன்ற நான் அடைந்து மகிழ்ந்தேன் என்கிறார். தாயினும் நல்ல தலைவன் தாழ் சடையோன் என்பது நிறுவப்பட்ட உண்மை. தாயான தாயிறைவனை தாய்மொழியில் வாழ்த்தி தாய்மை பத்தியில் இன்புற்று அவன் அடி சேர்வோம்.

**"நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி**
**நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி**
**நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே."**

திருச்சிற்றம்பலம்

# ஈழத்து சித்தர்கள்:
# தவத்திரு யோகர் சுவாமிகள்

## எண்சித்திகளும் வல்லர்-யாழ்ப்பாணத்திலும் இருந்தார் கதிர்காகம் ஆடிவேலிலும் இருந்தார்

**(யோகர் சுவாமிகள் கடந்த மாத தொடர்ச்சி)**

இந்த நாட்டைப் பொறுத்தவரை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக சராசரி மனிதரிலும் பன்மடங்கு உயர்ந்து நின்ற பெரியோர்கள் பலருண்டு. திருமூலர், பாம்பாட்டிச் சித்தர், சிவவாக்கியர் போன்றவர்கள் தம் பாடல்கள் மூலம் மக்கள் சமுதாயத்திற்கு வழிகாட்டியவர்கள் ஆவார்கள். இதன் எதிராக வேறு பல சித்தர்கள் தாங்கள் வாழ்கின்ற காலத்தில் தம்மை வந்தடையும் மக்களின் குறைகளைப் போக்கி நல்வாழ்வு வாழ வழி செய்தவர்கள் ஆவார்கள்.


யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் வாழ்ந்து 1964 வாக்கில் வீடுபேறடைந்தவர் இச்சுவாமியாவார். இவர் ஒரு தனிப்பட்ட இடத்தில், சிறிய குடிசையொன்றை அமைத்துக் கொண்டு அதனுள் இருந்து வந்தார். அந்தக் குடிசைக்குள் நுழைய வேண்டுமானால் யாராக இருந்தாலும் குனிந்து இடுப்பை வளைத்துக் கொண்டுதான் உள்ளே செல்ல முடியும். மீண்டும் வெளியே செல்வதும் இதே முறையில்தான். அந்த நாட்டை ஆண்ட பிரதம மந்திரி முதல் ஆங்கிலேயர்வரை மிகப்பலர்ச் சுவாமியிடம் அளவிலாத அன்பு பூண்டு வாழ்ந்தனர். சிங்களவர், இசுலாமியர், தமிழர், ஆங்கிலேயர்கள் என்ற வேறுபாடுமின்றிச் சுவாமியிடம் ஒவ்வொரு மாலையும் மக்கள் கூட்டம் திரண்டு நிற்கும். குடிசைக்குள் அதிகமாக பதினைந்து அல்லது இருபதுபேர் தான் நிற்க முடியும். இவ்வாறு நிற்பவர்கள் தம் வழிபாட்டை முடித்துக் கொண்டு வெளியே சென்ற பிறகு தான் அடுத்த கூட்டம் உள்ளே நுழையமுடியும். ஒவ்வொருவரும் காணிக்கையாக பழங்களை வாங்கி வந்துச் சுவாமியின் திருவடிகளில் வைத்து வணங்குவார்கள். எந்த ஒன்றையும் சுவாமி எடுத்து வாயில்ப் போட்டதாக வரலாறு இல்லை.

குறைதீர்க்க வேண்டி வந்தவர்கள் வாய்விட்டுத் தம்குறைகளை சொல்லும் பழக்கமில்லை. எனவே பதினைந்து இருபது நிமிடங்கள் ஒரு கூட்டம் உள்ளே நின்றாலும் ஒருவர்கூட வாய்திறந்து எதனையும்ச் சுவாமியிடம் கூறியதில்லை. இந்த நடைமுறையின் பொருளை நான் தெரிந்து கொள்வதற்குச் சிறிதுகாலம் பிடித்தது. 1950 வாக்கில் முதன் முறையாகச் சுவாமியைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அதற்குமுன்னர் சுவாமியைப் பற்றி அதிகமொன்றும் தெரிந்துகொண்டதில்லை. முதன் முறையாக என்னை அழைத்துச் சென்றவர் வழக்கறிஞர் பணிபுரியும் ஓர் அன்பராவார். உள்ளே சென்று, சுவாமிகளை விழுந்து வணங்கிவிட்டு ஏனையோர்களுடன் நானும் நின்று கொண்டிருந்தேன். திடீரென்று சுவாமி, “எடே பொடியன் இங்காலை வந்திருக்கட்டும்” என்று கூறிவிட்டு வலப்புறம் கையைக் காட்டினார்கள். என்னைத் தான் சுவாமி குறிப்பிட்டார்கள் என்பதை அறியாத நான் பொடியன் என்று கூறியது யாரையென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தேன். சுவாமி விரலினால் சுட்டிக்காட்டி “பொடியா! உன்னைத் தான்” என்று கூறினார்கள். இப்பொழுது என்னை ஒரு பயம் பற்றிக் கொண்டது. சுவாமி முன்நிற்பவர்கள் யாரும் எதிரே அமர்வதில்லை என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியிருக்க நான் மட்டும் எப்படி அமர்வது என்று பயந்து நிற்கையில் கருணை நிறைந்த பார்வையோடு “வா மகனே! இங்கே வந்து உட்கார்” என்று கூறிவிட்டு வலக்கையால் அமரவேண்டிய இடத்தையும் தொட்டுக் காட்டினார்கள். அன்று முதல் எத்தனையோ தடவைகள் சுவாமியிடம் சென்றுள்ளேன். ஒவ்வொரு முறையும் வீழ்ந்து வணங்கியவுடன் அமரச் செய்வார். முதல் இரண்டு தடவைகளில் சுவாமி சொல்லிக் கொண்டிருந்தவை, என் மனத்தில் குழப்பத்தை விளைவித்தன. சுவாமி விடாமல் நீளமாகப் பாடிக்கொண்டே இருப்பார். கூர்ந்து கவனித்த பொழுது திருவாசகத்தில் ஒரு அரையடி, தேவாரத்தில் ஒன்றரையடி, திருவிசைப்பாவில் நாலு சொற்கள் என்று மாறி மாறிப் பாடிக்கொண்டே இருப்பார். என் போன்ற விவரம் புரியாதோருக்கு ஏன் சுவாமி இப்படி அரையடி முக்காலடி என்று பாடுகிறார் என்ற சந்தேகம். வெளியே வந்து நண்பர்களைக் கேட்டபோது எப்போதும் சுவாமிகள் இப்படித்தான் பாடிக்கொண்டே இருப்பார்கள் என்றார்களே தவிர யாரும் என் ஐயத்தைப் போக்கவில்லை. உள்ளிருந்து வெளியே வந்த அன்பர்களைக் கண்டு பேசும்போது ஓர் உண்மை தெரியலாயிற்று. தாங்கள் பெரும் குறையோடு இருந்ததாகவும், சுவாமி பாடிக் கொண்டிருக்கையில் குறிப்பிட்ட சிலவார்த்தைகள் தம் மனத்துள் புகுந்து பெரிய அமைதியைத் தந்ததாகவும், தம்முடைய பிரச்சனைகட்கு அவை விடையாக அமைந்த தாகவும் கூறினார்கள்.

வருபவர் வாய்விட்டுக் குறைகளைக் கூறுவதும் இல்லை. தங்களுக்கு என்ன குறையென்று அந்த அருளாளர் கேட்பதுமில்லை. ஆனாலும் வருபவர்க்கு அமைதி கிடைத்துவிடும். கம்பநாடன் “வாராதே வர வல்லாய்” என்று கூறுவதன் பொருளை சுவாமி உடன் இருக்கும்போது தெரிந்து கொள்ள முடிந்தது. ஏறத்தாழ இருபது தடவைகளுக்கு மேல் சுவாமியைத் தரிசித்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் நான்கைந்து நாட்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பேன். ஆதலால் அன்றன்று என் சொற்பொழிவு முடிந்தவுடன் சுவாமியின் சந்நிதிக்குச் சென்று அரை மணியோ ஒரு மணியோ அவரின் திருவடிக்கீழ் அமர்ந்து அவரின் அருளைப்பெறும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். இப் பெருமகனார் எல்லாம் வல்ல சித்தர் என்பதை நிரூபிக்க இந்நிகழ்ச்சிகள் துணைபுரியும் என்று நம்புகிறேன்.




அ.ச.ஞானசம்பந்தன் ஐயா அவர்கள்



ஒருமுறை திருவாளர் சிறீகாந்தா என்பவர் யாழ்ப்பாணத்தில் மாவட்ட இணைப்பாளராக பணிபுரிந்து வந்தார். அவரும் அவர் துணைவியாரும் சுவாமியிடம் பெரும் பத்தி கொண்டவர்கள். அவர்களுடன் தங்கியிருந்த நானும் சுவாமியைப் பற்றி அவர்களிடம் பேசிக் கொண்டிருப் பதில் பெருமகிழ்ச்சி அடைவேன். இம்முறை கதிர்காமத்தில் ஆடிவேல் விழா நடைபெறுகின்ற நாளாகும். திருவாளர் சிறீகாந்தா எங்கிருந்தாலும் ஆடிவேலுக்கு கதிர்காமம் செல்வது வழக்கம். ஆனால் இம்முறை ஊரைவிட்டுப் போகக் கூடாதென்று அரசு ஆணைகட்டிப் போட்டதால் போக முடியவில்லையென்று வருந்தினார். நெருங்கிய நண்பராகிய அவர் “அ. ச. ஐயா! யோகசுவாமிகள் தவறாமல் ஆடிவேலுக்கு கதிர்காமம் போய் விடுவார்கள். இந்த ஆண்டும் போயிருப்பார்கள் நமக்கோ போகமுடியவில்லை. சுவாமி தங்கி இருக்கும் குடிலுக்குச் சென்று அவர்கள் அமரும் பீடத்திற்கு ஒரு கும்பிடுபோட்டு வரலாம் வாருங்கள்” என்றார். அதை ஏற்றுக்கொண்டு நான் புறப்பட நானே காரை ஓட்ட ஏற்றுக்கொண்டேன். முதல் இருக்கையில் சிறீகாந்தாவும் நானுமிருக்க பின் இருக்கையில் திருமதி சிறீகாந்தா அமர்ந்தார்கள். உறுதியாக சுவாமி இருக்கமாட்டார் என்ற துணிவுடன் சென்றோமாதலால் குடிலின் வாயிலை நெருங்குகின்ற வரையில் பேசிக்கொண்டே சென்றோம். மூவரும் நுழைந்தவுடன் மிகப்பெரிய அதிர்ச்சிக்குள்ளானோம். நாங்கள் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை பேசவும் முடியவில்லை. அந்த நிலையிலும் அந்த அருளாளர் “பொடியா உன்னுடைய இடத்தில் வந்து இருக்கட்டும்” என்றார். நண்பர் சிறீகாந்தாவும் அவர் மனைவியும் சுவாமி கூட ஆடிவேலுக்குப் போகவில்லை என்பதைக்கண்டு ஒன்றும் புரியாமல் நின்றார்கள். சுவாமி அவர்களைப் பார்த்து “ஏன் மகனே! ஆடிவேலுக்குப் போகவில்லையா?” என்று கேட்டார்கள். நண்பர் சிறீகாந்தா கண்ணீர் ஆறாகப் பெருக, வாய்குழறி அரச ஆணையின் காரணமாக தான் யாழ்ப்பாணத்தில் தங்க நேரிட்டது என்று சொல்லி அழுதார்கள்.

உடனே சுவாமி பின்வருமாறு கூறினார்கள்: “கவலைவேண்டாம் மகனே, நமக்கென்ன கூறினார்கள்: வாகனமா இருக்கிறது? அந்த மடையனுக்குத் தான் மயில் வாகனம் இருக்கிறது. வேண்டுமானால் அவன்தான் நம்மிடம் வரவேண்டும். நாமெங்கே போவது?” என்று சொல்லி விட்டு சிரித்துக்கொண்டே பாட ஆரம்பித்து விட்டார். ஒரு மணி நேரம் இங்கே தங்கியபிறகு சுவாமியிடம் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினோம். வரும் பொழுது நண்பர் சிறீகாந்தா சொல்லியது இன்னும் என் கவனத்தில் உள்ளது, “அ. ச. ஐயா! பல ஆண்டுகளாக தவறாமல் ஆடிவேலுக்குக் கதிர் காமம் செல்லுகின்ற நான் இந்த ஆண்டு போகமுடியவில்லையே என்று வருந்தினேன். ஆனால் சுவாமியும் போகவில்லை என்பதை இப்போ கண்டு விட்டோம். அவரைத் தரிசித்ததால் கதிர்காமத்தானைத் தரிசித்துவிட்டோம் என மனத்தில் நிறைந்து விட்டது” என்றார்.

இரண்டு நாட்கள் கழித்து கொழும்பிற்குச் சென்றேன். அங்கு ஐந்து நாட்கள் பேச ஏற்றுக் கொண்டிருந்தேன். முதல்நாள் போய் இறங்கியவுடன் வழக்கம்போல் சேர். கந்தையா வைத்தியநாதன் உட்பட பலர் விமானநிலையம் வந்திருந்தனர். அன்று நண்பகல் செய்தி விளம்பரத்துறைச் செயலாளர் வீட்டில் நண்பகல் உணவிற்கு ஏற்பாடாகி இருந்தது. சாப்பிடுவதற்கு முன் ஆடிவேல் விழாவை ஒளிப்பதிவு எடுத்திருக்கிறோம் பார்க்கிறீர்களா என்று கேட்டார். நான் சரியென்றவுடன் சன்னல்களை எல்லாம் மூடிவிட்டு 14. மி.மி திரைப்பட (செழதநஉவழச) கருவி வைத்து மூன்று நாட்கள் முன்னர் நடந்த ஆடிவேல் விழாவில் எடுத்த படத்தைப் போட்டார்கள். சில நிமிடங்கள் கழிந்த உடன் என்மூச்சே நின்றுவிடும் போல் ஆகிவிட்டது. காரணம் யாழ்ப்பாணத்தில் சிறீகாந்தா உட்பட எங்கள் மூவரிடமும் ஒருமணிநேரம் காட்சி தந்த யோகசுவாமிகள் அதே நேரத்தில் கதிர்காமத்தில் ஒலிவாங்கியின் முன்னர் பேசுவதை அந்தச் ஒளிப்படம் காட்டிற்று.

அதிர்ந்துபோன நான் செயலாள நண்பரைப் பார்த்து “இது என்ன பழையபடம், இதைப் போட்டுக் காட்டினீர்களே” என்றேன். அதை மறுத்த அவர் முந்தாநாள் எடுத்ததுதான் இது என்பதற்கு அத்தாட்சியாக அந்தப் படச்சுருளை வைக்கும் தகரப் பெட்டியின் மேல் எழுதியிருந்ததைக் காட்டினார். எப்பொழுது எடுக்கப்பட்டது எந்த மணியிலிருந்து எதுவரை என்றெல்லாம் அதில் எழுதியிருந்தது.

பொறுமை இழந்த நான் உடனே தொலைபேசி மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள சிறீகாந்தாவுடன் தொடர்பு கொண்டேன். நான் எவ்வளவு எடுத்துக் கூறியும் சிறீகாந்தா நம்ப மறுத்துவிட்டார். “அ. ச. ஐயா! நாம் மூன்றுபேரும் சுவாமிகளிடம் ஒரு மணிநேரம் இருந்ததையும் அவரது பொன்மொழிகளைக் கேட்டதையும் நன்றாக அறிவோம். ‘நமக்கென்ன வாகனமா இருக்கிறது. அந்த மடையனுக்குத் தான் மயிலிருக்கிறது’ என்று கூறியது நினைவில்லையா?” என்று கேட்டார். எவ்வளவு சொல்லியும் நண்பர் சிறீகாந்தா படச்சுருளை நம்பத் தயாராக இல்லை. அரசுப் பணியாளர்கள் ஏதோ தவறு செய்து விட்டார்களென்றே உறுதியாக நம்பினார். இந்நிலையில் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். ஐந்து நாள் சொற்பொழிவு முடிந்ததும் கொழும்பிலிருந்து நேரே சென்னை வருவதற்கு என்னிடம் பயணச் சீட்டிருந்தாலும் அதை மாற்றி யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் தங்கிச் செல்ல முடிவு செய்தேன். அன்று கூட்டத்திற்கு வந்திருந்த பலரும் கதிர்காமம் சென்று மயில்வாகன முருகனையும் மானுட வடிவில் யோகர்சுவாமிகள் என்ற பெயரில் இருந்த முருகனையும் கண்டவர்கள் ஆவர். பேசியதை இவர்கள் அனைவரும் நேரே சுவாமியின் சொற்போழிவை கேட்டவர்களாதலால் அவர்கள் என்னை நம்பத் தயாராகவில்லை.

இந்த நிலையில் என் பணி முடிந்தவுடன் ஆறாம் நாள் புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்தேன். விமான நிலையத்திற்கு வந்த சிறீகாந்தா இது பற்றி அவசரமாக என்னுடன் பேசவிரும்பியதால் ஓட்டுநரை விட்டுவிட்டு தானே வண்டி ஓட்டி வந்திருந்தார். பலாலி விமான நிலையத்திலிருந்து மாவட்ட இணைப்பாளர் இல்லம் செல்லும்வரையில் நடந்தவற்றையெல்லாம் கூறினேன். நண்பர் சிறீகாந்தா அவர்கள் உறுதியாக அந்தச் சினிமாப் படம் பழையபடம் என்ற முடிவிலிருந்து மாறவேயில்லை. அன்றுமாலை ஒரு மணியளவில் நாங்கள் மூவரும் சுவாமியைத் தரிசிக்கச் சென்றோம். விழுந்து வணங்கியவுடன் சுவாமி “பொடியா! நீ ஏன் பட்டணம் போகாமல் இங்கே வந்தாய்?” என்றவுடன் நான் அச்சத்தோடு நடந்தவற்றைக் கூறினேன். சுவாமி கடகடவென்று சிரித்துவிட்டு, “அந்த மடையனுக்குத்தான் மயிலிருக்கிறது. நாங்கள் எப்படி அங்கே போகமுடியும். மயிலா இருக்கிறது. நமக்கு?” என்று கூறிச் சிரித்தார். அட்டமா சித்திகளில், வேறொருவர் காணாமல் ஒரே நேரத்தில் பல இடங்களில் இருக்கும் சிறப்பு சித்தர்களுக்குரியது என்பதைப் படித்திருக்கிறேன். ஆதலால் மனத்தில் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, “சுவாமிகள் அங்கே இருந்ததும் உண்மை. இது அட்ட...., “ என்று தொடங்கினேன், அந்த வார்த்தையை முழுவதும் கூறவிடாமல் சுவாமிகள் உரத்தகுரலில், “பொடியா! செருப்படி வேண்டுமோ மகனே உனக்கு? மூடடா “ என்றார்கள், பிறகு அன்பொழுகப் பேசிக் கொண்டிருந்தார்கள். மறுநாள் நான் சென்னை மீண்டு விட்டேன். யோகர் சுவாமிகள் எல்லாம் வல்ல சித்தர் என்பதற்கு தலையாய எடுத்துக் காட்டு இதுவாகும்.

“சித்த யோகசுவாமிகள் என்ற கட்டுரை முப்பத்தைந்து ஆண்டுகள் முன்னர் எனக்குப் புதுவாழ்வு தந்து, என்னைப் பணிகொண்ட ஒரு மாபெரும் சித்தருடைய வாழ்க்கையில் எனக்கு நேர்ந்த அனுபவங்களைத் தொகுத்து எழுதியதாகும்.” - பேராசிரியர் அ.ச.ஞான சம்பந்தன்

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் - பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்**
**தொகுப்பு - சிவத்திரு. வடிவேலு கங்காளன்**

# தமிழகம் எங்கும் ஞானவிழுதுகளை பரப்பி நிற்கும் ஆலமரம்

# சிவத்திரு. ஞானவொளியடிகள் (ஒளியகம் ந. ஒளியரசு) அவர்களின் வரலாற்று மாட்சி



செங்கல்பட்டைத் தாண்டி சென்னையை நோக்கி மகிழுந்து வேகமாக சென்றுகொண்டு இருந்தது. பின்னிருக்கை 70 அகவையினார் உடனலக் குறைவால், படுத்துக்கொண்டு வருகிறார். ஓட்டுநருக்கு முன்னிருக்கையில் ஒருவரமரும் இருக்கையில் இருவர் அமர்ந்து வருகிறார். முதியவர் படுத்து ஓய்வாக பயணிக்க வேண்டும் என்றே இந்த ஏற்பாடு. பரனூர் பகுதியைத் தாண்டியிருப்பர், வண்டியை நிறுத்தி விட்டு, அம் முதுமகனார் வாந்தி எடுத்துவிட்டார். உடல் உண்மையில் மிகவும் சரியில்லாத நிலைதான். எனினும் ஏதோ காரணம் பற்றிப் பயணிக்கின்றனர்.

மகிழுந்து மெதுவாக குரோம்பேட்டை பகுதியை அடைந்தது. அப்பெரியவர் முன்பமர்ந்திருப்பவரை "பல்லாவரம் வந்துவிட்டதா?" என்று வினவினார். "இல்லை குரோம்பேட்டையிலுள்ளோம் சாமி" என்று சொல்ல, அவர்கள் முடியாமல் படுத்திருக்கும் தன்னை அமர வைக்கச் சொன்னார். பல்லாவரம் பகுதி கடந்த பின், ஒரு சில மணித்துளிகளில் மீண்டும் மகிழுந்தை நிறுத்தி தன்னை முன்புபோல் படுக்க வைத்து விடுமாறு கேட்டுக் கொண்டார்கள். உடன் வந்த அன்பர்களும் அவ்வாறே செய்தனர்.

இந்நிகழ்வு 1980களில் நிகழ்ந்தது. வாசகர்களே, இந்நிகழ்வு இயல்பான நிகழ்வுபோல இருக்கலாம். ஆனால், அம்மகிழுந்தில் முன்னிருக்கையில் அமர்ந்து வந்த ஒருவருக்கு இந்நிகழ்வின் சொல்லொணா மேன்மை சில பல ஆண்டுகள் கழித்தே தெரியவந்தது.

மகிழுந்தில் படுத்து வந்தவர், தனித்தமிழ் இயக்கத் தந்தை, முனைந்த நல்கொள்கை வீரர் மும்மொழிப் புலமை வேந்தர், மனித்தருள் தெய்வம் போன்ற அருட்குருநாதர் மறைத்திரு. மறைமலை அடிகளாரின் தலைமை மாணாக்கரும், திருக்குறள் பீடம், குருபழநி ஆதீனத்தின் முதற்குரவர் அருட்குருநாதர் தவத்திரு. அழகரடிகளார் ஆவார்கள். "பல்லாவரம் மறைமலையடிகள் வாழ்ந்த பகுதி ஆகையால் அவரை வணங்கும் பொருட்டு, தன் உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் எழுந்தமர விழைந்த, அடிகளாரின் குருபத்திமையை நாம் என்னென்று சொல்வது!" என்று அடிகளாரின் மாணவர் ஒளியகம் ந.ரா. ஆடலரசு (அருள்நெறி தீக்கை அம்பலவாண தேசிகர்) சொன்னபொழுது தான், மகிழுந்தில் முன்னிருக்கையில் அடிகளாரோடு வந்தவருக்கு அந்நிகழ்வின் மேன்மை விளங்கலாயிற்று. அவர்தாம், வாழையடி வாழை என வந்த, தமிழ்ச்சைவ ஞான மரபின் ஐந்தாம் அருட்குரவர். சிவத்திரு. ஞானவொளியடிகளார் (ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்கள்).

1846ம் ஆண்டு சைவ சித்தாந்த சண்டமாருதம் அருட்குருநாதர் சூளை சோமசுந்தர நாயகரை முதற்குரவராக கொண்டு சைவத்தமிழ் மரபும் அதன் மாணாக்கர் திரளும் பேரியக்கமாக இயங்கினர். அன்னாரையடுத்து அருட்குருநாதர் மறைமலையடிகளாரும், அவருடைய மாணவர் திருக்குறள்பீடம், குருகுலம், குருபழநி ஆதீனம் தவத்திரு. அழகரடிகளாரும், அவரை அடுத்து நான்காம் குரவராக திருக்கேதாரச் செல்வர், சிவநெறிச்செம்மல், அருள்நெறித்தீக்கை அம்பலவாண தேசகிர் சிவத்திரு ஒளியகம் ந.ரா. ஆடலரசு ஐயா அவர்களும் வழிவழி இவ்வருந்தமிழ் ஞானமரபை தலைமையேற்று நடத்தினார்கள். இவ்வருள்மரபில் ஐந்தாம் அருட்குரவராக விளங்கி வருபவர், ஒளியகம் ந.ரா. ஆடலரசு ஐயா அவர்களின் திருமகனார் சிவத்திரு. ஞானவொளியடிகளார் (ஒளியகம் ந. ஒளியரசு ஐயா) அவர்கள் ஆவார்கள்.

நம் காலத்து வாழும் இத்தமிழ்நெறி வேள்விச் செம்மலின் வரலாற்று மாட்சி ஈண்டு கட்டுரைக்கலாவோம்.




01.12.1952, கார்த்திகை திங்கள் சகடு (ரோகிணி) நாண்மீனன்று, சிவத்திரு ஒளியகம் ந.ரா. ஆடலரசு - திருவாட்டி சரசுவதி இணையருக்கு நான்காம் மகவாக செங்குந்த மரபில் தோன்றினார் ஒளியரசு அவர்கள்.

"பிறவியில் வருவோர் எல்லார்க்கும், பிறப்பின் நிகழ்ச்சிகளாக வரலாறுகள் உண்டு. குழந்தையாகத் தோன்றுவது, பெற்றோர் உடன் பிறந்தார் இன்னார் என்பது, பொருள் சேர்த்து எளிதாக வாழ்ந்து வரும் உலகியல் முறைகள், மறைவு முதலியன யார்க்கு இல்லை? அவற்றைத் தெரிவித்தல் வரலாறு ஆகாது. அவை எல்லார்க்கும் பொது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புகள் எவையேனும் வாழ்க்கையில் அமையுமானால், அத் தனிச் சிறப்புகளே 'வரலாறு' என்று குறிப்பதற்கு வாய்ப்புடையவை! இயற்கையாக அமையும் பிறவி நிகழ்ச்சிகளில், வாழ்க்கை செய்கையாக அங்ஙனம் மாட்சிகள் நிகழ்வதானால், எழுதுவதற்கும் அவை சிறப்பாக உதவும்" என்று மறைமலையடிகள் வரலாற்று மாட்சி முன்னுரையில் அழகரடிகளார் அருளியுள்ளார்கள்.



சிவத்திரு.
கோதின் மொழிக் கொற்றவன்
திருக்கழுக்குன்றம்

அவ்வகையில் வாழ்க்கையே தனிச் சிறப்பாக அமைந்தள்ளது ஐந்தாம் குரவர்க்கு! பெரிய தந்தையார் வித்துவான் புலவர் ந.ரா. தேவராசனார், சிறிய தந்தையார் புலவரேறு திருக்கோயிலிதழாசிரியர் ந.ரா. முருகவேளனார், தமிழும் சைவமும் தம்மிரு கண்ணென பேணும் நற்குடும்பத்தில் பிறந்த பெருமகனார், அருளுடன் பெருட்டிற முமறிய, இளங்கலைப் பொருளாதாரமும் (பி.ஏ.) இளவணிகவியலும் (பி.காம்) பயின்றார்.

இவர் சைதாப்பேட்டை, சென்னை நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பயின்று வரும் காலத்திலேயே எதிர் பாராமல் ஒரு சிவனிரா நாளில் (மாசி மகாசிவராத்திரி) திருக்குறள் பீடம் அருட்குருநாதர் சிவத்திரு. அழகரடிகள் அவர்கள் அவராகவே எழுந்தருளி சமய தீக்கை அளித்தார்கள்.

### வாழ்க்கைத் துணைநலம்:-

1978ஆம் ஆண்டு, அருட்குருநாதர் அழகரடிகளாரே திருக்கழுக்குன்றம் நால்வர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் முவில் மானாம்பதி திருவாளர். டி. தனபால் முதலியார், திருவாட்டி பாலாமணி அம்மை ஆகியோரின் மகள் த. மல்லிகா அம்மையாரை திருமணம் செய்து வைக்கும் பேறு பெற்றவர்.

### பணி:-

விழுப்புரம் உஷா குழந்தைகள் பள்ளியில் (நர்சரி பள்ளி) மேலாளராகி தன் பணியைத் தொடங்கியவர். கெல் கம்பொனெண்ட்ஸ் நிறுவனத்தில் காசாளர், தமிழக அரசின் புள்ளியியல் துறையில் உதவிப் புள்ளியியல் ஆய்வாளர், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தில் இளநிலை உதவியாளர் என பல பரிணாமங்களுடன், 2010இல் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் துணை மேலாளராய் இருந்து ஓய்வு பெற்றார்கள்.

தொழில்சார்ந்த இப்பணிகளேயன்றி தொண்டாக, சைவ சித்தாந்த பெருமன்றத்தில் மாத தணிக்கையாளர், செயற்குழு உறுப்பினர் (1985 - 1986), பெருமன்ற செயலாளர் (1987 - 1992), சைதைத் தேவார சபையில் தணிக்கையாளர், சைவச் சித்தாந்தப் பெருமன்றத்தின் 'சித்தாந்தம்' இதழின் துணை ஆசிரியர், மீண்டும் செயற்குழு உறுப்பினர் (1995 - 2003), விழுப்புரம் "தெய்வீக பேரவை"யில் (1975 - 79) நிறுவன - செயலர், தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றத்தின் தலைவர், அப்பர் தொண்டரணி துணைத்தலைவர், அப்பர் விழா அறக்கட்டளை மற்றும் சுந்தர விழா அறக்கட்டளை செயலாளர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர், நூலாசிரியர், கட்டுரையாசிரியர் என்று பல பரிணாமங்களில் செயலாற்றி வருகின்றார்கள்.

### பெருமன்ற பணிகள்:-

அறிவுக்கடல் மறைமலை அடிகளாரால் திருப்பாதிரிப்புலியூர் அருட்டிரு ஞானியார் அடிகள் திருமடத்தில் 7.7.1905இல் தொடங்கப் பெற்ற சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் செயலராக தொண்டாற்றிய காலகட்டத்தில் இவர்களாற்றிய பணிகள் அளப்பரியன. 1942இல் மன்றத்தில் வெளியிட்ட திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் கூடிய திருவாசகம் மறு பதிப்பு வெளியீடு, திருமுறைக்காவலர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் வெளியிட்ட ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் கூடிய ஏழாம் திருமுறை பதிப்பு வெளியீடு, பதினோராம் திருமுறை நூல் அச்சிட்டு தஞ்சை மாநாட்டில் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்களைக் கொண்டு வெளியீடு, முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களைக் கொண்டு நால்வர் முத்திப் பதிகங்களும் உரை எழுதச்செய்து, சென்னை செனாய் நகர் திரு.வி. சம்பந்தம் அவர்கள் நிதி உதவியில் "வீடு பேறளிக்கும் விழுமிய பதிகங்கள்" நுல் வெளியீடு போன்றவை அவற்றுள் குறிப்பிடத் தகுந்தவை.

மலேசியா கோலாலம்பூர் சித்தாந்த கலாநிதி, சைவ பூஷணம் திரு.ஆர்.வி. கந்தையா அவர்கள் 1987 இல் தமிழகம் வந்தபோது சைவ சித்தாந்தப் பெருமன்றச் செயலர் என்ற நிலையில் அவரைச் சென்னை விமான நிலையத்திதல வரவேற்று, தியாகராய நகர், டாக்டர் நாயர் சாலையில் அவர் தங்கியிருந்த இல்லத்துக்குச் சில முறை சென்று அவரிடம் பேசி ஒரு இலட்சம் ரூபாய் நிதி பெற்று "மலேசியா கந்தையா அறக்கட்டளை" என்று அன்னாரின் பெயரில் அறக்கட்டளை அமைத்து அதன் செயலராய் இருந்து அந்நிதியிலிருந்து முதல் வெளியீடாக தூத்துக்குடி திரு. பொ. முத்தையா பிள்ளை விளக்கத்துடன் கூடிய "சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்" என்ற நூலை 1989இல் வெள்ளக்கோயில் மாநாட்டில் வெளியிட்டார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று பெரியபுராணம்:
# ஆலங்காடனின் அன்புத்தாய் - காரைக்கால் அம்மையார்



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

உலகெலாம் படைத்தும், காத்தும், கரந்தும், விளையாடி கொண்டிருப்பவன் இறைவன். அவனின்றி இங்கு ஏதும் நடப்பதில்லை. தாயும், தந்தையுமாய் உலகில் வாழும் அத்தனை உயிர்களையும் அரவணைப்பதும் அவனே. அவன் எங்கிருந்து வந்தான், என்ற கேள்வி எழுமாயின் அதற்கு அருளாளர்கள் அற்புதமான பதிலை தருகின்றனர். மாணிக்க வாசகப் பெருமான் "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" என சிறப்பித்துப் பாடுகிறார். மேலும் திருச்சாழல் பதிகத்தில் "தாயுமிலி, தந்தையிலி தான் தனியன்" என்கிறார். எனவே தோற்றமும் இல்லை, முடிவும் இல்லை என்பது நன்கு புலனாகிறது. இருப்பினும் நாம் எப்படி நினைக்கிறோமோ, அப்படியே அருள் தந்து நிற்கிறான். இதனை அப்பர் பெருமான் "அப்பன் நீ, அம்மை நீ, அன்புடைய மாமனும், மாமியும் நீ" என வரும் பாடல் மூலம் தெளிவு படுத்துகிறார். இப்படியாக உலகத்திற்கே அம்மையப்பனாக இருப்பவனே, "அம்மை" என அழைத்தானென்றால் அது எவ்வளவு பெரிய பேறு என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அப்பேற்றை பெருவதற்கு காரைக்காலினில் மலர்ந்ததொரு தெய்வக்கொழுந்து. புனிதவதி எனும் குணவதியாக அவதரித்தார் அம்மையார். செல்வ வளமிக்க குடும்பத்தில் பிறந்தாலும், பிறை முடி பெம்மானையே பெருஞ்செல்வமாக கருதி வளர்ந்து வந்தார். தந்தையின் பேரன்பு பெருமாட்டியை பேணி வந்தது. திருமணப் பருவம் வந்தவுடன் நாகைப் பட்டினத்து பெரு வணிகனின் மகனான பரமதத்தனுக்கு நல் மணம் புரிந்து வைத்தார். மேலும், தன் மகளைப் பிரிய



மனமில்லாது கணவனுடன் வசிப்பதற்கு அவ்வூரிலேயே மாளிகை அமைத்தார். இப்படியாக பெருமாட்டி இன்புற்று வாழ்ந்து வந்தார்.

ஆங்கொருநாள் பரமதத்தன் மாங்கனிகள் ஓரிரண்டு இல்லத்தில் கொடுக்கச் செய்தான். அம்மையாரும் அதனை வாங்கி அங்கு வைத்த பிறகு, நல்லடிசில்தான் (சோறு) செய்ய ஆயத்தமானார். அவ்வேளையில் பரமனார் திருத்தொண்டர் பசியின் மிகுதியால் மனையுள் புகுந்தார். திருதொண்டரின் நிலை கண்டு, திருவமுது கொடுப்பேன் என்று, முன்னர் பாதங்கள் விளக்க நீர் அளித்து பரிகலம் திருத்தி இட்டார். அந்த நேரத்தில் அடிசில் (சோறு) மட்டுமே தயாராக இருந்தது. இச்சூழலை தெய்வச் சேக்கிழார் பெருமான் சிறப்பாக காட்டுகிறார்.

"கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட,
வெறிமலர்மேற் றிருவனையார் விடையவன்ற னடியாரே
பெறலரிய விருந்தானாற் பேறிதன்மே லில்லை யெனும்
அறிவினரா, யவரமுது செய்வதனுக் காதரிப்பார்"

கறியமுது என்பது அடிசிலுடன் கூட்டுணவாகக் கொள்ளும் கறி வகைகள். இருந்ததோ திருவமுது மட்டும் தான். ஆனால் எவ்வித திகைப்புமின்றி, சிவனடியாரே தேடிப்பெறுதற்கரிய விருந்தாக இங்கு வந்து இருப்பதால், வேறு என்ன பேறு நமக்கு வேண்டும் என்று எண்ணி, அமுது கொடுக்க ஆயத்தமானார். தன் கணவர் கொடுத்த நல்ல நறு மாங்கனிகளில் ஒன்றை படைத்து அடியார்க்கு அமுது செய்வித்தார். அடியாரும் பசி தீர்ந்து அம்மையாரை வாழ்த்தி போயினர்.

அதன் பிறகு மனைப்பதியாகிய பரமதத்தன் உணவருந்த வருகிறான். அம்மையாரும் அன்புடனே பரிமாற அதில் மாங்கனியும் இடம்பெறுகிறது. மாங்கனியை உண்ட பிறகு அதன் சுவையில் திளைத்தவன், இன்னொரு கனியையும் வேண்டுகிறான். அம்மையார் மனம் தடுமாறுகிறார். இன்னொரு கனிக்கு எங்கு செல்வேன் என தன்னை மறந்த நிலையில் இறைவனை நினைக்கிறார். அந்த மாத்திரத்திலேயே அவருடைய கைகளில் ஒரு மாங்கனி, உற்ற இரு இடத்தில் உதவும் பெருமான் அருளால் வருகிறது.

(09ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகம் எங்கும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

1929 மே 21 முதல் 26 வரை ஆறு நாட்கள் திருப்பாதிரிப்புலியூர் திருக்கோவிலூர் திருமடத்தில் அருட்டிரு ஞானியார் அடிகள் முன்னிலையில் அறிவுக்கடல் மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டிலும், அதனை அடுத்து 18.04.1930ல் பேரறிஞர் கா.சு. பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற முதல் சைவ இளைஞர் மாநாட்டிலும் நிறைவேற்றப்பெற்ற "சைவர்களுக்குள் நடக்கும் திருமணம் முதலிய எல்லாச் சடங்குகளை" தூய்மையும், சிக்கனமுமுடைய முறையில் தமிழிலேயே செய்தல் வேண்டுமென்றும், அவ்வாறு அழகுறச் செய்வதற்குச் சில சைவர்களைப் பழக்கும் பொறுப்பை சமாஜத்தார் மேற்கொள்ள வேண்டுமென்றும் இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது" என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதனை செயல்முகப்படுத்தும் வகையில், முதலில் திருமணம் செய்வதற்கு ஒரு நூல் திருமுறை அடிப்படையில் வெளியிடவேண்டும் என்று 1988ல் புதுச்சேரி மாநாட்டில் (88ம் மாநாட்டில்) ஒரு தீர்மானம் நிறைவேற்றச் செய்து ஒளியகம் ந.ரா. ஆடலரசு அவர்களைக் கொண்டு "திருமுறைத் திருமணம்" செய்முறை விளக்கத்துடன் கூடிய நூல் எழுதச் செய்து அன்றைய பெருமன்றத் தலைவர் திரு. கி.இல. பழநி சுவாமி அவர்களின் நிதி உதவியில் அச்சிட்டு 1989ல் வெள்ளக்கோயில் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

புலவர் அம்பை சங்கரன் அவர்களைக் கொண்டு சைவ சமய தோத்திரம், சாத்திரம், விழாக்கள், அறுபான் மும்மை நாயன்மார் வரலாறு முதலிய தகவல்களைத் தொகுக்கச் செய்து குறிஞ்சிப்பாடி திரு. ஆ. இராஜரத்தின முதலியார் அவர்களின் நிதி உதவியில் "சைவ சமயக் கையேடு" என்ற நூலினை வெளியிட்டார். அத்துடன் திருவெற்றியூர் மாநாட்டில் "சுருக்கமுறைச் சிவபூசை" நூல் வெளியீடு எனப் பல நூல்களை வெளியிடும் பணிகளை முன்னின்று நடத்தினார்.

மாணவர் மன்றத்தில் 2 நாட்கள் திருமணம் புதுமனைப் புகுவிழா, திருமண உறுதி விழா, திருவடிப்பேறு வழிபாடு செய்முறைப் பயிற்சி வகுப்பு 2001 முதல் 2008 வரையும் 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் ஆக 10 முறை ஒளியரசு ஐயா அவர்கள் நடத்தியுள்ளார்.

1979 முதல் தந்தையார் சிவத்திரு ந.ரா. ஆடலரசு ஐயா அவர்கள் செய்து வைக்கும் திருமுறைத் திருமணம் முதலிய நிகழ்வுகளுக்கு உடன் சென்று தொண்டாற்ற தொடங்கி, 1987 ஆம் ஆண்டு முதல் வாழ்வியல் சடங்குகளைத் தமிழில் செய்யத் தொடங்கினார்கள். தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம், மகாராட்டிரம், தில்லி முதலிய மாநிலங்களில் திருநெறிய தீந்தமிழ் ஓதி திருமுறை வழியில் வாழ்வியல் சடங்குகளை நடாத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

செந்தமிழ் வேள்விச் சதுரர் திரு.மு.பெ. சத்தியவேல் முருகனார், அமுதமொழியரசு திரு. சங்கர நாராயணன் ஆகியோருடனும் பல குடமுழுக்கு பணிகளில்




பங்குகொண்டமை குறிப்பிடத்தகுந்தது ஆகும்.

1987 - திருக்குறள் பீடம் - வைத்தமிழ்மணி
1997 - யோகாம்பிகை திருமுறைக்குழு - திருமுறை வேள்விச் செம்மல்
2001 - பாம்பனார் பணி மன்றம் - சிவநெறிச் சீலர்
2009 - பேரூர் ஆதீனம் - தமிழ்நெறி வேள்விச் செம்மல்
2012 - தமிழ்நாடு திருமுறை சித்தாந்த ஆய்வு மையம் - சிவஞானச்சுடர்

என்றெல்லாம் ஐயா அவர்களைப் போற்றி, தமிழ் வழிபாட்டைப் போற்றும் அமைப்பினர் பலர் அளித்த பட்டங்கள் ஏராளம். விரிப்பின் பெருகும் தொகுப்பின் எஞ்சுமென அஞ்சி இவ்வளவில் விடுக்கின்றோம்.

ஆசிரியத் திருமுழுக்கு (ஆச்சாரிய அபிடேகம்):-

2003 தந்தையார் சிவத்திரு ந.ரா. ஆடலரசு அவர்களுக்கு உடம்பு தளர்ச்சியுற்றதனாலும், தொடர்ந்து விரும்புகின்ற அன்பர்களுக்கு திருமுறை அடிப்படையில் தீக்கை செய்து வைக்க ஒருவர் வேண்டுமே என்ற எண்ணத்தினாலும், 1988 முதல் 1997 வரையில் தன்னுடன் இருந்து சைவ சித்தாந்தப் பெருமன்ற மாநாடு நடைபெற்ற இடங்களிலும், 1993 முதல் 2002 வரையில் கோவை ஒத்தகால் மண்டபம், பவானி, கரூர், திருக்கழுக்குன்றம், புன்செய்ப்புளியம்பட்டி, மதுரை, திருநெல்வேலி, இன்னபிற இடங்களிலும் சிவத்திரு ஆடலரசு ஐயா அவர்கள் செய்து வைத்த சமய, விசேட தீக்கைகளின் போதும் உடனிருந்து தொண்டு செய்து பெற்ற அடைவு முதலியவற்றைக் கருத்தில் கொண்டும் திரு. ஒளியரசு அவர்களுக்கு அவருடைய தந்தையார் சிவத்திரு ஆடலரசு ஐயா அவர்கள், நுண்மை மற்றும் ஆசிரியத் திருமுழுக்கைச் செய்துவைத்து, இனி விரும்பும் அன்பர்களுக்குத் திருமுறை அடிப்படையில் தீக்கைகள் செய்து வைக்க ஆணையிட்டார்கள்.

அவ்வாணைக்கு ஏற்ப அவ்வாண்டே 15.06.2003 அன்று புதுச்சேரியில் நடைபெற்ற சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் மாநாட்டில் 21 அன்பர்களுக்கு சமய தீக்கையும், 10.10.2003 அன்று பவானியில் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஏற்பாட்டில் 42 அன்பர்களுக்கு சமய தீக்கையும், 18 அன்பர்களுக்கு விசேட தீக்கையும், திருக்கழுக்குன்றம் அப்பர் சுந்தரர் விழாக்களின் போதும், வேளச்சேரி அன்பர் சத்தியமூர்த்தி இல்லத்தில் அவருக்கும் சில அன்பர்களுக்கும் தீக்கை செய்து வைத்துள்ளார்கள்.

தொடர்ந்து, திருமுறை நெறியில் பல்லாயிர கணக்காக அன்பர்களுக்கு தீக்கை செய்து வருகிறார்கள். ஒரே விழாவில், 5 முதல் 225 அன்பர்களுக்கு சமய தீக்கையும், ஒருவர் முதல் 70 அன்பர்களுக்கு விசேட தீக்கையும் அருளும் கருணையும் ஆற்றலும் நிரம்பப் பெற்றவர்கள்.

பாடல்பெற்ற திருத்தலங்கள் சிலவற்றிற்கு பலமுறையும், பலவற்றிற்கு சிலமுறையும் தம் மாணாக்கர்களோடு சென்று வழிபட்டு வந்திருக்கிறார்கள். அழகரடிகளார் காலந்தொட்டு திருமுறை பாடல் பெற்ற தலங்களை, அன்பர்களோடு சென்ற வழிபாடு செய்து வரும் செய்திகளை விரிப்பின் அது தனி நூலாகும்.

தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றப் பணி, தீக்கை அருளுதல், தமிழில் வழிபாடாற்றல், சொற்பொழிவு, நூலாக்கம், தமிழில் வழிபாடாற்ற பல நூறு மாணவர்களை தமிழகமெங்கும் உருவாக்கி வருதல், திருக்கழுக்குன்றம் நால்வர் குருபூசை விழாக்கள், அருட்குருநாதர் ஆடலரசு ஐயா குருபூசை விழா என தொடர்ந்து பல பணிகளை தனது 70ம் அகவையிலும் இடையறாது செய்து வரும் எம்மருமை குருநாதர் உரைத்தது:

"என் தந்தையார் தன் இறுதி காலம் வரை பேருந்திலும், இரயிலிலும் பயணித்து, திருமுறை நெறியில் தமிழ் வழிபாடு செய்து வைத்தார்கள். எல்லாம் வல்ல பெருமான் கருணையினால் சொந்த மகிழுந்தில் சென்று வழிபாடாற்றும் நிலையை எமக்கு வாய்த்துள்ளது. உடலில் உயிர் உள்ளளவும் திருமுறை நெறியில் வழிபாடு செய்துவைக்க செல்வேன்."

என்னே, எம் குருநாதரின் தனித்தமிழ்ப் பற்று, சைவத்திறம்!

## அடியார் பெருமையின்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறைவனை எண்ணி நெகிழ்ந்து தன் கணவனுக்கு பரிமாற, அதனை உண்ட பரமதத்தன் இவ்வாறாக அம்மையாரை பார்த்து, இக்கனியின் சுவை முன்பிருந்த கனியை காட்டிலும் மிகவும் சிறப்பாக இருக்கிறது. மூவுலகிலும் கிடைக்காத ஒரு கனியாக இருக்கிறது. எப்படி இது உனக்கு கிடைத்தது எனக் கேட்கிறான். அந்த இடத்தில் திகைத்துப் போகிறார் அம்மையார். மேலும் அந்த சூழலில் அம்மையார் மனம் எப்படி இருந்தது என்பதை தெய்வ சேக்கிழார் பெருமான் சிறப்பாகக் கூறுகிறார்.

"அவ்வுரை கேட்டலும் மடவார் அருள் உடையார் அளித்து அருளும்
செவ்விய பேர் அருள் விளம்பும் திறம் அன்று என்று உரை செய்யார்
கை வரு கற்புடை நெறியால் கணவன் உரை காவாமை
மெய் வழி அன்று என விளம்பல் விட மாட்டார் விதிர்ப்பு உறுவார்"

அம்மையாரின் மனநிலையை அப்படியே படம்பிடித்துக் காட்டக் கூடியப் பாடல். பெருமான் செய்த அருளையும் பிறருக்கு கூறக்கூடாது. கணவனிடம் எவற்றையும் மறைக்கவும் கூடாது, என்கின்ற நிலையில் அம்மையார் மனம் எப்படி இருந்திருக்கும். அதுதான் இப்பாடல். அதன்பிறகு எதுவாயினும் சரி கற்புநெறி தவறாத அம்மையார் நடந்தவற்றை நடந்தபடி தன் கணவனிடங் கூறுகிறார்.

பரமதத்தன் அந்த அளவிற்கு பரமனுக்கு பக்தனில்லை என்பதால், நகைத்து அப்படியென்றால் இன்னொரு கனியையும் இறைவனிடம் கேட்டு வாங்கிக்கொடு என்கிறான். அம்மையார் உடனே அங்கிருந்து நீங்கிச் சென்று பெருமானை நினைத்து துடிக்கிறார். இந்த இடத்தில் கணவனார் கூறியதைப் போல் மாங்கனி வரவில்லையென்றால், நான் சொன்னது பொய்யென ஆகிவிடும் என இறைவனிடம் முறையிடுகிறார். இதில் ஒரு அற்புதமான செய்தி "என்னுடைய உரை



தெய்வச் சேக்கிழார்

பொய்யாகிப் போனால் பரவாயில்லை பெருமானே! உங்களுடைய அருள் பொய்யானதாகிவிடும். எனவே அதை என்னால் பொறுக்க முடியாது. கனியை தந்தருள வேண்டுமெனக்" கண்ணீர் மல்க கேட்கிறார். கேட்டவுடனேயே மாங்கனியும் வந்துவிடுகிறது. அதனைப் பரமதத்தன் தன் கைகளில் வாங்குகையில் அது மறைந்துப் போகிறது. உடனே பரமதத்தன் பயந்து விடுகிறான். இவள் சாதாரண பெண்ணல்ல, தெய்வப் பெண் என நினைத்து யாரிடமும் கூறாது மனதில் வைத்துக் கொள்கிறான் .

அதன் பிறகு வணிகம் செய்யும் கடல் கடந்து செல்வதைப் போல், உற்றாரிடம் கூறி மரக்கலம் செய்து பணியாட்களுடன் செல்கிறான். சென்றவன் பல நாட்கள் ஆகியும் திரும்பவில்லை. பிறகு அவன் பாண்டிய நாட்டுப் பட்டினமொன்றில் திருமணம் செய்து வாழ்ந்து வருவதாக செய்தி வருகிறது. அம்மையாரின் தகப்பனார் துன்பம் மிகுந்து துடிக்கிறார். சுற்றத்தாருடன் புனிதவதியாரை, அவர் கணவன் இருக்கும் இடத்திலேயே கொண்டுபோய் விடுவதெனத் தீர்மானிக்கிறார்கள். அம்மையாரும் எதுவும் பேசாமல் அமைதியாக அவர்களுடன் செல்கிறார். காரைக்காலில் இருந்து அம்மையாரும், சுற்றத்தாரும் வரும் செய்தியை அறிந்து தானும் தன் மனைவியும், மகளுமாக ஓடிவந்து அம்மையாரின் திருவடிகளை விழுந்து, வணங்குகிறான் பரமதத்தன். அம்மையார் சுற்றத்தாருக்கு அருகில் அச்சத்தோடு ஒதுங்குகிறார். உறவினர்கள் யாவரும் இதென்ன மனைவியின் காலில் கணவன் வீழ்ந்து வணங்குவது எனக் கேட்க, அதற்கு



பரமதத்தன் கூறுகிறான். இவர் மானிடர் அல்லர் நற் பெருந் தெய்வம். நீங்களும் இவரை போற்றவேண்டும் எனச் சொல்கிறான். இதைக் கேட்ட சுற்றத்தார் என்ன இவன் பிதற்றுகிறான் எனக் கூறி அதிசயிக்கின்றனர்.

அம்மையார் உடனே இறைவனிடம் பின்வருமாறு வேண்டுகிறார்.

"ஈங்கிவன் குறித்த கொள்கை யிது் வினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங், குன்பால்
ஆங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு" மென்று பரமர்தாள் பரவி நின்றார்".

இப்பாடலில் மிகவும் சிறப்பான செய்தி வெளிப்படுகிறது. இன்றைய காலக்கட்டத்தில் முதுமை காரணமாக ஏதாவது உடலில் சிறு மாற்றம் ஏற்பட்டாலும், உடனே அதை எப்படி மறைப்பது, தன்னை எப்படி இளமையாக காட்டிக் கொள்வது என போராடுகிறோம். ஆனால் அம்மையார் இந்த வனப்புத் தாங்கிய உடலமைப்பு அவனுடன் வாழ்வதற்கானது. அவன் ஒரு கொள்கையில் ஒதுங்கி விட்டான். எனவே வனப்பு மாறி உன்னைப் போற்றி வாழும் "பேய் வடிவு" வேண்டுமென்கிறார். இறைவனும் அதனை அருளிச் செய்கிறார். அந்த பேய் வடிவம் எப்படி இருந்தது என்பதை அம்மையாரே தன்னுடைய திருப் பதிகத்தில் குறிப்பிடுகிறார்

"கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி யலறி யுலறுகாட்டில் தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தன லாடும்எங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே".

பிறகு வடதிசைத் தேயங்களெல்லாம் கடந்து கயிலை மலையை அடைகிறார். இறைவன் வீற்றிருக்ககூடிய மலையை எவ்வாறு கால்களால் மிதிப்பதென, தலையினால் நடந்து செல்கிறார். இன்றும் கூட திருவாலங்காட்டில் கொடி மரத்தினருகே இருந்துப் பார்த்தால் அக்காட்சியை சுதை வடிவமாக வைத்திருப்பதைக் கண்டின்புறலாம். இந்த காட்சியை இமயமடக்கொடி அம்மையார் காணுகிறார். அதனை தெய்வச் சேக்கிழார்ப் பெருமான் சிறப்பாகக் கூறுகிறார்.

"அம்பிகை திருவுள்ளத்தி னதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் ''தலையினா னடந்திங் கேறும்
எம்பெரு மானே ரெற்பின் யாக்கையன் பென்னே?" யென்ன,
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான்".

ஏனெனில், எலும்பு வடிவாக இருக்கிறார். ஆனால் தலைகீழாக நடந்து கயிலைக்கு வருகிறார். அவருடைய அன்புதான் என்ன! என எம்பெருமானிடம் கேட்கிறார். இங்கு அம்மையார் நாமெல்லாம் அறியும் பொருட்டு கேள்வியை கேட்கிறார், என்று எடுத்துக்கொள்ள வேண்டும். உடனே இறைவன் பதில் கூறுகிறான். அதனையும் தெய்வச்சேக்கிழார் பெருமான் அற்புதமாக காட்டுகிறார்.

"வருமிவ ணம்மைப் பேணு மம்மைகா ணுமையே! மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றன"ளென்று, பின்னை
யருகுவந் தணைய நோக்கி, " அம்மையே!" யென்னுஞ் செம்மை
யொருமொழி யுலக மெல்லா முய்யவே யருளிச் செய்தார்."

தலையினால் நடந்து வருகின்றவள் சாதாரணவள் கிடையாது. நம்மைப் பேணுகின்ற அம்மை என்கிறார். இங்கு பேணுதல் என்பது ஊட்டி, காத்தல் என்றும் அன்பு மிகுதியால் பாராட்டிப் போற்றுதல் என்றும் இரு பொருள்பட உரைத்தது. மேலும் எப்படி இறைவன் அம்மை என குறிப்பிட்டாரென்றால், அதற்கு அம்மையார் செய்த அரும் செயல்களே காரணமாக அமைகிறது. ஏனெனில் அடியார்களை எந்த அளவிற்கு அம்மையார் போற்றி இருக்கிறாரென்பதை, "தொண்டர்வரிற் தொழுது" (1721), "நம்பர் அடியார் அணைந்தால் நல்ல திருவமுது அளித்தும்.. வேண்டுவ கொடுத்தும்" (1731), "நாதன் தன் அடியாரைப் பசி தீர்ப்பேன்" (1734) போன்ற பாடல் வரிகளின் ஊடாக அறிய முடிகிறது.

இச்சூழலில் திருமூலரின் திருமந்திரப் பாடல் பொருத்தமாக இருக்கும். அப்பாடல்

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே".

அம்மையார் அடியார்களை போற்றி பரவியதன் மூலம் ஆண்டவனைப் போற்றியதற்குச் சமமாகிறது. அதன் காரணமாக இறைவன் அம்மை என்று அழைப்பது மிகப்பொருத்தமாக அமைகிறது. உடனே இறைவன் மறுபடியும் அருகில் வந்தவுடன் "அம்மையே" என்று அருள் செய்கிறார். உடனே அம்மையார் "அப்பா" என அவருடைய பாதத்தைப் பணிந்து விழுந்து எழுந்து பார்க்கிறார். உடனே இறைவன் "நம்பால் இங்கு வேண்டுவது என்? "எனக் கேட்கிறார். இந்த இடத்தில் ஒரு தாய்க்கும் மகனுக்குமான உரையாடல் போல நினைத்து பார்ப்போமாயின், தாயானவள் தன் குழந்தையைப் பேணி பாதுகாத்து வருவாள். குழந்தை வளர்ந்தவுடன் தாயிடம் அன்பாக கேட்கிறது. உங்களுக்கு என்ன வேண்டும் அம்மா என, அதற்குத் தாயும் ஒரு பதிலைச் சொல்வாள். அதே போன்ற ஒரு சூழலை இப்பாடல் நமக்கு காட்டுகிறது. இறைவன் காரைக்காலம்மையை "அம்மா" என அழைக்கிறான். தாய் குழந்தையை அப்பா என அழைப்பதைப் போல் அம்மையும் கூறுவதாக இப்பாடல் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. உடனே அம்மையார்

"இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்"
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்"

இங்கு இறவாத அன்பென்பது நீடித்த அன்பு. எப்பொழுதும் நீங்காத அன்பு. ஏனெனில் அன்பு தான் எல்லாவற்றையும் செய்ய வல்லதாக இருக்கிறது. அதன்பிறகு பிறவாமை வேண்டுமென்பது. இறைவனுடன் எப்பொழுதும் இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு. ஏனெனில் அம்மையார் தன் மகனிடம் கூறுவதெல்லாம் நான் உன்னுடனே இருக்க வேண்டும் என்பதுதான். அதேபோலத்தான் ஒரு தாய் உணர்வை காட்டுவது போலவே ஒவ்வொரு சொல்லும் இங்கே இருக்கின்றது. அதன்பிறகு மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துப் பாடிக்கொண் டிருக்கையில் நீ ஆட வேண்டும். அப்பொழுது உன் அடியின் கீழ் நான் எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று இப்பாடல் அமைந்துள்ளது. உடனே இறைவன் தென்னாட்டிலே "ஆலங்காடு" என்னும் இடத்தில் இதனைச் செய்வோம் எனக் கூறுகிறார். இன்றும்கூட ஆலங்காட்டில் அம்மை பாடிக் கொண்டுதான் இருக்கிறார். ஆண்டவனும் ஆடிக் கொண்டுதான் இருக்கிறானென்பதைப் போலத்தான் அங்கு சென்றால் நமக்கு தோன்றும். அம்மையார் உடைய மற்றுமொரு பாடல் மூலமாக அற்புதமானத் தாயுணர்வு வெளிப்படும்.

"இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாமஇவரை இகழ்வதேக் கண்டீர்-
இவர்தமது பூக்கோல மேனிப்பொடிப்பூசி என்பணிந்த பேய்க்கோலங் கண்டார் பிறர்".

இப்பாடலில் தன்னுடைய குழந்தையை யார் எப்படிப் பேசினாலும், தாய் விட்டுத் தரமாட்டாள். அதைப் போலவே இறைவனே உலகத்தவர் எப்படிப்பார்த்தாலும் அம்மையார் ஆண்டவனாகவே பார்க்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனே "அம்மை" என்று அழைத்த பிறகு நாம் அம்மையாரின் அன்பை அளவிட முடியுமா? அம்மையாரின் திருப்பதிகங்கள் அத்தனையும் இறைவனை மிகச்சிறப்பாகக் காட்டுகிறது. அம்மையாரின் புகழைப் பாடுவோம். ஆண்டவனின் அருளைச் சேர்வோம்.

"நம்பன் திருமலை நான்மிதி
யேனென்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்
தேற வுமைநகலும்
செம்பொன் னுருவனெ ன்அம்மை
யெனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பி னுககாரைக் காலினின்
மேய குலதனமே". - திருத்தொண்டர் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்

# சிவபூமியில் சிவனைத் தேடி - மட்டக்களப்பு செட்டிபாளையம் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு




1981 ஆனியில் இடம்பெற்ற முதலாவது கடவுள் மங்கல நீராட்டு

"கதிரவன் விழித்திடும் கிழக்கினிலெ
ஆலைகடல் மோதும் தரையினிலெ
ஆமர்ந்தாய் சோமநாதராய் செட்டியூரினிலே"

என்னும் கவிநயமான பாவிற்கேற்ப இலங்கையின் கிழக்கு கரையில் அமைந்துள்ள மட்டக்களப்பில் செட்டியூர் என்று புகழப்படும் செட்டிபாளையம் எனும் பழம்பதியில் சோமநாதலிங்கேசுவரராய் சிவனார் அருள் பாலித்து வருகின்றார். இவ்வூர் மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது. பண்டைய காலம் தொட்டு இந்திய செட்டியார்கள் வணிக நோக்கம் கருதி இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று வணிகம் புரியக் குடியேறினார்கள். குறிப்பாக யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தி காலமிருந்து இந்திய செட்டியார்களின் இருப்பிடங்கள் கிழக்கின் பகுதிகள் சிலவற்றிலும் செல்வாக்குற்றிருந்தது. அந்த வகையில் இவ்வூரிலும் வருகை தந்த செட்டியார்கள் பாளையமடித்திருந்தார்கள் என்பதாகையால் செட்டிபாளையம், செட்டியூர் என பெயர் பெற்றது என்பர். தமிழ் நாட்டிலும் செட்டிபாளையம் எனும் இடமுள்ளது அங்கும் சிவனுக்கு கோயில் உண்டு.

### இயற்கை அமைவும் கோயில் வரலாறும்

நீர்வளமும், நல்ல நிலவளத்தால் கமத்தொழிலும், கற்றவர் வளமும், பொருள் பெற்றவர் வளமும் ஒருங்கே அமையப் பெற்ற இவ்வூரின் இடையில் சிவனாருக்கு கோயிலும், இதனைச் சூழ வடக்கே விநாயகர் கோயிலும், தெற்கே கந்த சுவாமி கோயிலும், கிழக்கே வைரவர் கோயிலும், மேற்கே பத்தினிக்கும் கோயில் உண்டு. தற்போதுள்ள சிவன் கோயில் வடக்கு நோக்கிய வாசலையும், ஆகம முறைப்படி விமானத்துடன் கூடிய கருவறை, கொடிமர அமைப்பு, நந்திபீடம், இராசகோபுரம், மணிக்கோபுரம், பரிபார தேவர் கோயில்கள் என்பவற்றுடன் பிரமிப்பான அழகிய ஓவியங்களும், சிற்பங்களும் செறிந்தும் காணப்படுகின்றது.

இத்தலத்தின் உற்பத்தி வரலாற்றினை ஆராயும் போது இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்த காலத்திலே தோன்றியதாக கூறப்படுகிறது. இந்நியாவிலிருந்து 1939 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சோமேசுவரானந்த கிரி எனும் சுவாமியால் திருகோணமலை, குருக்கள்மடம், செட்டிபாளையம் என்னும் இடங்களில் மடங்கள் அமைத்து சமயப் பிரச்சாரங்கள் புரிந்து வருங்கால் திருகோணமலை குச்ச வெளியில் உள்ள செம்பி மலையில் செம்பீசுவரர் ஆலயத்தையும், குருக்கள்மடத்தில் திருமால் கோயிலையும்,



அருள்மிகு சோமநாதலிங்கேசுவரர்

செட்டிபாளையத்தில் சிவனார் கோயிலையும் உருவாக்கினார் என்று கூறப்படுகின்றது. இதற்கேற்றால் போல் சிவன் கோயிலின் அருகாமையில் இன்றும் அவருக்கும் திருவுருவப்பூசை நடைபெற்று வருவதையும் சுவாமியினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிவன் ஆலய திருவருள் சங்கம் (1940), ஐக்கிய மாதர் சங்கம் (1940) ஆகிய திருப் பணிச்சபைகள் இன்றும் முட்டுப்படாமல் இயங்கி வருகின்றமையையும் செம்மி மலையில் உள்ள செம்பீசுவர பெருமானைச் செட்டிபாளையச் சிவனடியார்கள் சென்று வழிபட்டு வருவதனையும் காணமுடிகின்றது.





கோயில் தொடங்கும் போது அடிகளார் சோமேசுவரானந்த கிரி அவர்கள்

சுவாமி அவர்களால் இவ்வூரில் உருவாக்கப்பட்ட திருவருள் ஆண்கள் சங்கம், திருவருள் பெண்கள் சங்கத்தினரின் ஊடாக தற்போது உள்ள ஆலய இடத்தில் களிமண்ணால் மடம் ஒன்று அமைக்கப்படடு சிவ வழிபாடும் வெள்ளிக்கிழமைகளில் பூசைகளும் இடம் பெற்று வந்தன. திருவருள் சங்க பெண்கள் ஒவ்வொரு வாரமும் செவ்வாக்கிழமைகளில் கூடி தாம் வீடுவீடாகச் சேர்த்த பிடிஅரிசியினைச் சேர்த்து பூசை பணிக்காகக்கொடுத்து வந்தனர். இவ்வாறு இக் கோயில் மடத்தில் தோன்றி வளர்ந்தமையால் இன்றும் இவ்வூரார் மடத்து கோயில் என்று பழமை மாறாது போற்றிவருகின்றனர். சுவாமியின் இறைபதத்தைத் தொடர்ந்து மடம் இருந்த இடத்தில் புதிய ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு நுன்மதி வருடம் ஆனி மாதம் நான்காம் தேதி தட்சணா நல்வேளையில் இறைதிருகூட்டி பின்பு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கத்திற்கு ஆகம முறைப்படி திருகுடமுழுக்கு விழா 1981-06-18 நிறைவேற்றப்பட்டது. அன்றிலிருந்து சுவாமியின் பெயரை நினைவிற் கொண்டு அங்கு அருள் சுரக்கும் சிவனை சோமநாதலிங்கேசுவரர் என்றும் நாயகியை சோம கலாநாயகி என்றும் பெயர் போற்றலாகினர். இதன் பின்பு 1996 ஆம் ஆண்டு திருகுடமுழுக்குப் பெற்று கீர்த்தியும் பெற்றது.

### கோயில் பூசைகளும் சிறப்புகளும்

இவ்வாலயத்தின் சிறப்பு என்னவெனில் வழமையாக எல்லா சிவன்கோயில்களிலும் இடம் பெறும் மூர்த்தி, தலம், தீர்த்த அம்சங்களுக்கு பதிலாக, வீரசைவபண்பாட்டைத் துலக்கும் குருலிங்க சங்கவழிபாடு மேன்மை பெற்றிருப்பதே ஆகும். இதற்கு காரணம் சோமேசுவரானந்த கிரி சுவாமியின் மடபாரம்பரியங்களும், சிவலிங்க பூசையும் ஆண், பெண் பக்தர்களை ஒன்றாக இணைத்து சங்கவழிபாடியற்றிய பேறுகளின் விளைவுகளே ஆகும்.


இவ் ஆலயத்தில் தினப் பூசைகளும், வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசையும் நடைபெற்று வருகின்றது. வருடம் தோறும் சிவனிரவு, கேதார கௌரி விரதம், கழுவாய் விரத வழிபாடுகள், திருவாதிரை, நவராத்திரி முதலிய விரத வழிபாடுகளும், தைவருடம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரை நிறைமதி, ஆனி உத்தரம், ஆடி மறைமதி முதலிய விசேட மாத பூசைகளும், திருவாதிரை விரத காலத்தில் மட்டும் திருவெம்பாவை ஓதுதல், திருவாசகப் படிப்பு, திருவிழா இறுதிநாள் சமுத்திரத்தில் தீர்த்தம் ஆடுதல் என்பனவும் இடம்பெற்று வருவதை தரிசிக்க முடிகின்றது.

இத்தலத்தின் மீதும் இவ்வூர்க் கவிஞர்களால் பல இலக்கியங்கள் தொடுக்கப்பட்டுள்ளன. இத்தலத்தின் வரலாறுபற்றி திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை வெளியிட்ட "ஈழத்து சிவாலயங்கள்" என்ற நூலில் ஒருகட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல் திருவருள் சங்க வெளியீடாக அமைந்த "ஆனந்தகிரி" பவளவிழாச் சிறப்பு மலரிலும் இக்கோயிலின் வரலாறு எழுதப்பட்டுள்ளது.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதற்கிணங்க செட்டியூர் சமூகத்தை ஒன்றிணைத்து சிவனார் கோயிலின் பெயருடன் சங்கம் அமைத்து, சமயம் ,சமூகம், கல்வி எனப் பல்துறைச் சார்ந்த ஆக்கபூர்வமான தொண்டுகளை புரிந்து சமயச் சமூக மேம்பாட்டிற்கு உதவி வரும் திருக்கோயிலாகவும் விளங்குகின்றது.

"சிவ சிவ என்றிடச் சிவகதிதானே"

# அயராது உழைக்கும் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகனாருக்கு அகவை அறுபது



சைவத்துக்கும் தமிழுக்கும் , புறம்பான விசைகள் தோன்றி, அதன் இருப்புக்கு இடையூறு செய்கிற போதெல்லாம், அருளாளர்களும் ஆற்றலாளர்களும் தோன்றி அதனை தகர்த்தனர். தம் சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்கள் எனினும் அவர்களுக்கு இறையருளும், எம் முன்னோர்களின் அருவத்துணையும் அருகிருந்து உதவியது. எமது ஈழநாட்டிலும், சித்தர்களும், சீரிய சமயப் பெரியோர்களும், அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்புக்களையும் தாண்டி தம் பணியைத் தலைமேல் கொண்டு ஆற்றினார். திருவளர். திரு.ஆறுமுகநாவலர் அவர்களின் வாழ்வும் பணியும் அத்தகையதே, அவர் சமயப் பணிக்கு மேலே ஒருபடி சென்று சமூகப் பணியையும், அரசியல்ப் பணியையும் இந்த மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் செய்து நிலைத்தார். அவரின் பின்னே, பல்லாண்டு கால இடைவெளியை ஈடு செய்து, இன்று உழைத்துக் கொண்டிருப்பவர் தான், செஞ்சொற் செல்வர் கலாநிதி.ஆறுதிருமுருகனார் அவர்கள்.

1961 ஆம் வருடம் மே மாதம் 28 ஆம் நாள், தமிழ் கடவுளாகிய முருகனும், தத்துவார்த்த கடவுளான கௌதம புத்தரும் அவதரித்ததாக கருதப்படும் வைகாசி விசாக நன்னாளிலே கோப்பாய் திரு. கந்தையா ஆறுமுகம் அவர்களுக்கும், இணுவிலைச் சேர்ந்த திருமதி.ஆறுமுகம் சரஸ்வதி அவர்களுக்கும் இளைய மகனாக திருமுருகன் என்ற பெயர் சூடிப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை இராமநாதன் கல்லூரியிலும், தரம் ஐந்தை யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்து கல்லூரியிலும் நிறைவு செய்த ஆறுதிருமுருகன் அவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்து, தனது கடின முயற்சியாலும், ஆற்றலாலும், ஆசிரியராக, அதிபராக உயர்ந்தார்.

தனது முப்பத்திரண்டாவது வயதில் ஆன்மீகத் தாய் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அன்புக் கட்டளையால், தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் அறநிதிய சபை உறுப்பினரான கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்கள், சிவத்தமிழ் செல்வி அவர்கள் சிவகதி அடைந்த பின்னர், ஆலயத்தலைவராக, நிர்வாகத்தினரால் தெரிவு செய்யப்பட்டு இன்று வரை ஆலயத்தின் பெரும் வளர்ச்சிக்கும், சிவத்தமிழ் செல்வி அவர்கள் உருவாக்கிய துர்க்காபுரம் மகளிர் இல்லம் உள்ளிட்ட அமைப்புக்களதும், அவரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கும் காத்திரமான வகையில் செயல்திறன் அளித்து சீரிய பணியாற்றுதல் சிறப்பானதேயாகும்.

ஒரு தனி மனிதனால், எவ்வாறு இப்படிச் சுழன்று சேவைபுரிய முடிகின்றது? என்ற கேள்வியைப் பலரின் மனதில் உருவாக்கியது இவரால் 2004 ஆம் வருடம் உருவாக்கப்பட்ட சிவபூமி அறக்கட்டளை. சைவசமயம் நிலையானது ! அது ஊழிக்காலம் வரை சிதையாது இருக்கும். ஆனால் ஆனால் அதனை பின்பற்றி ஒழுகும் மாந்தர்களின், நெறிப்பிறழ் வாலும், மதமாற்றத்தாலும், அதன் உண்மைப் பொருள் தலைமுறை கடந்து கடத்தப்படுவது சிரமத்துக்குள்ளாகும்.

இந்நிலை மாறவேண்டுமாயின் கல்வியையும், ஆதரவான அரவணைப்பையும், மாயைகளாக காட்டிப் புறச்சமயத்தவர் நம்மவரை சைவ நெறியில் நின்று மாற வைப்பதை தடுக்க வேண்டும்! இந்த பெரும் பணியில் முதற்படியே சிவபூமி, சிறுவர் மனவிருத்தி பாடசாலையை 2004.07.02 இல் கோண்டாவிலில் உருவாக்கிய கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்கள், தனது சமூகம் நோக்கிய மகத்தான பெரும் பாய்ச்சலை மேற்கொண்டார்! அந்த பாடசாலை, கிளிநொச்சியிலும், திருகோணமலையிலும், நிலையான கட்டமைப்புக்களுடனும், மனவளர்ச்சி குறைந்த மாணவர்களுக்கு கல்வியை கடந்து, அவர்கள் சமூகத்தில் மதிப்புமிகு மனிதர்களாக உருவாக்க, தொழில் முயற்சி சார்ந்த பயிற்சிகளை வழங்கியும், விளையாட்டுத்துறையில் சர்வதேச விருதுகளையும் பெறும் வாய்ப்பை உருவாக்கியதும், கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் செம்மை சேர் பணி என்றால் அது மறுப்பதற்கில்லை!

ஒரு தாயாக, நல்ல தந்தையாக, சிறந்த ஆசானாக, அந்த மாணவர்களின் கண்கண்ட கடவுளாக இருந்து அவர்களுக்கும் ஒரு உலகத்தை உருவாக்கிய மாண்பு மகத்தானது! அந்த பணியால் சிவபூமி சிறுவர் மனவிருத்தி பாடசாலை தேசிய விருதைப் பெற்று, மேலும் சிறப்புப் பெற்றுது!

எப்படிக் குழந்தைகளும், சிறுவர்களும் பராமரிக்கப்பட வேண்டியவர்களோ, அப்படியே முதுமை வாய்க்கப்பெற்றவர்களும் சமூகத்தின் அரவணைப்பை வேண்டி நிற்பவர்களாகின்றனர். எனவே ஆதரவற்ற முதியவர்ளை பராமரித்து அரவணைக்க, 2000.04.07 அன்று, சுழிபுரத்தில் திரு.பாலச்சந்திரன் அவர்களின் உதவியுடன், 11 முதியவர்களுடனும் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களால் உருவாக்கப்பட்ட சிவபூமி முதியோர் இல்லம் இன்று 80 முதியவர்களை தன் அன்புக் கரங்களால் அரவணைக்கின்றது! ஒரு நல்ல மகனைப்போல அவர்களோடு உண்டு உறங்கி, அவர்களின் இறுதி கிரியைகள் தொடக்கம் இறுதி தீ மூட்டுவது வரை, தன் கடமையாகவே செய்யும் கலாநிதி. ஆறுதிருமுருகனாரின் பரந்த மனதும், பார்ப்போர் வியக்கும் பண்பும் போற்றுதலுக்குரியன. முதியவர்கள் இறை சிந்தையுடனும் இயற்கையின் தாலாட்டொடும் இன்புற்றுருக்க வேண்டி கீரிமலை நகுலேச்சரத்துக்குப் பின் வீதியில், தற்போது அமரர் கிருஸ்ணப்பிள்ளை அவர்களின் புத்திரர்களின் உதவியுடன் முதியோர் மடம் ஒன்றை நிர்மானித்தும் வருகின்றார். கருவில் பிறந்த பிள்ளைகளே செய்யாத சேவைகளை அம்முதியவர் பொருட்டு செய்வது மகத்தானது.

மண்ணின் மக்கள் நலம்பெற்று வாழ்வதைப் போலவே, இந்த மண்ணின் வரலாறும், மொழியும் நிலைபெற வேண்டும்! பெரும்பான்மை சமூகத்தின் சுயநலம் மிக்க செயல்களால் எம் வரலாறு திரிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும், எமது நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதும் ஆண்டாண்டுகளாய் இடம்பெறும் அநீதி. இந்த நிலை மாற, எமது பக்தி இலக்கிய மாண்பை உலகுக்குச்சொல்லும், திருவாசகப்பாடல்கள் முழுவதையும், கருங்கற்களில் பொறித்து, வைத்தியர் மனோமோகன் தம்பதியினரின் தயவுடன், நாவற்குழியில், திருவாசக அரண்மனையைக் கலையழகுற எமக்காக உருவாக்கிய கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்களால் அதன் எதிரிலேயே, எமது வரலாற்றை ஆவணப்படுத்த மூன்று தளங்களில், சிவபூமி அரும்பொருட்காட்சியகம் நல்லோர் இணைவால் அமைக்கப்பட்டு, இம் மண்ணை ஆண்ட 23 மன்னர்களின் உருவச்சிலைகளும் அமைக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது!

வலி சுமந்த வலிவடக்கின் ஆதி மயிலிட்டியில் கந்தபுராண ஆச்சிரமும், ஆதுரசாலையும் அமைத்தார். ‘அபயம்’ என்கிற பெயரில் இவரால் இயக்கப்படும் இவ் இலவச மருத்துவ நிலையங்களால், பயன் பெறும் ஏழை மக்களின் எண்ணிக்கை பல்லாயிரம்! கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்களால் இப்படி உருவாக்கப்பட்ட அறக்கட்டளைகளும், நிதியங்களும் ஏராளம், எல்லாவற்றையும் ஒரு கட்டுரையில் உள்ளடக்குவது என்பது இயலாத காரியம்!

எத்தனையோ பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள், உதவு தொகைகள், அனர்த்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள், யாழ் போதனா வைத்தியசாலை முதல் கிராம வைத்தியசாலைகள் வரை பயன் பெறும் வகையில் நிதிமூலங்களை உருவாக்கி வழங்கியதன் மூலம், புறச் சமயங்கள் எதைக்காட்டி எம் மக்களை ஈர்த்தனவோ, அந்த வழிகளிலேயே திடமான அரண்களாக, ஆதரவு மையங்களை அமைத்து, சமய மாற்றத்தை தடுத்து நிறுத்திய பெருமை கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்களையே சாரும்! கஞ்சித் தொட்டி அமைத்து பஞ்சம் தீர்த்த ஆறுமுகநாவலரின் செயலுக்கு ஒப்பானது சற்று மிகையானதும் கூட!

ஆறுமுகநாவலர் கட்டமைத்த, சொற்பொழிவு மரபை, பின்பற்றி, இலங்கை முழுவதும் உள்ள கோயில்களில் எல்லாம் சொற்பொழிவு செய்தார். இந்தியா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்ரேலியா, அமேரிக்கா, சிங்கப்பூர், சுவிற்சலாந்து போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்று அங்குள்ள சைவத்தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தும் உரைகளை ஆற்றினார். அங்கு வாழும் தமிழர்களால் அமைக்கப்பட்ட, ஆலயங்களில் சொற்பொழிவுகளை மேற்கொண்டார்! அடியவர்களும் அன்பர்களும் திரட்டிக்கொடுத்த நிதி முழுவதையும் நம் நாட்டில் சமய அறப்பணிகளுக்கு தன்னலம் கருதாமல் வழங்கி மகிழ்ந்தார்!



எந்த பிரதிபலனையும் எதிர்பாக்காமல், ஆறுமுகநாவலரை போன்றே, இல்லற வாழ்வில் புகாது, சமூகத்தின் நல்லறம் காத்திட விளையும், கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுகனார், அவர்கள் இந்த மண்ணின் சைவத்தமிழர்களுக்காக நல்ல தலைமைத்துவம் மிகுந்த பணிகளை எதிர்காலத்திலும், முன்னெடுக்க வேண்டும் என்பதும், அறுபது அகவை காணும் ஐயா, நூற்றாண்டு விழாவும் காணவேண்டும் என்பதே எம் அனைவரது எதிர்பார்ப்பாகும்!

ஒற்றை மனிதராகவே சுழன்று உழைக்கும், கலாநிதி. ஆறுதிருமுருகன் அவர்கள், தனி மனித ஆளுமையின் சான்றே எனலாம்! அகில இலங்கை இந்துமாமன்றத்தையும், நல்லை ஆதீனத்தையும் இயக்கும் மிக முக்கிய விசையாகிய இவர் தாம் கட்டமைத்த கட்டமைப்புக்களுக்கெல்லாம் எதிர் காலத்திலும், நிதி ரீதியான நன்மைகளை வழங்க வல்ல, வயல்களையும், தென்னந்தோப்புக்களையும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும், கொள்வனவு செய்து பராமரித்துப் பலனும் கண்டு வருகின்றார்! எதிர்காலம் பற்றிய பார்வையும், நிகழ்காலம் குறித்த சமூக அக்கறையோடும், பணியாற்றும் நாம் கண்ட, ஆறுமுகநாவலராய், ஐயா ஆறுதிருமுருகனாரைப் போற்றுகின்றோம். அவர் வாழ்வுக்கும் பணிகளுக்கும் அவரை வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்!

அத்துடன் இவ்வாறான சேவைகளை, அரும்பணியினை தனக்குப் பின்னர் வளர்க்க சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், திருமுருகன் ஐயாவினை எமக்கு தந்ததைப் போல் ஐயாவும் அடுத்த தலைமுறைத் தலைவர்களை தெரிந்து அவர்களை சைவத்தமிழ்ப் பணியில் ஈடுபடுத்த நிச்சயம் அருளுவார் என , அகவை அறுபதில் அகமகிழ்வோம்.

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்





சித்திரை நிறைமதிப் பூசைகளும் தென்னாடு வெளியீடும்





அப்பர் சுவாமிகள் குருபூசை - சித்திரை செக்கு நாண்மீன் (சதயம்) - மே 6




கிளிநொச்சி நொச்சியப்பர் கடவுள் மங்கலம்







பளை பச்சிலைப்பள்ளிநாதர் செந்தமிழாகம கடவுள் மங்கல நன்னீராட்டு




தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எட்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” , சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு விடை நல்லோரை வைகாசித் திங்கள் 12ம் நாள் நிறைமதி அன்று (26-05-2021 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org